Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00


தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/1105)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 21 புதன்கிழமை (07.12.2011) பக்கங்கள் 16 ஓசை – 67




இந்தியாவும் உடையுமாம்

12



தேசிய ரீதியில் பாடசாலை

06



க.பொ.த (சா/த) நேரசூசி

04



எவரும் தோன்றவில்லை

04

# ஏற்க முடியாத கோரிக்கைகள் முன்வைக்கின்றது கூட்டமைப்பு

## அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசிற்கும், கூட்டமைப்பிற்கும் இடையே நேற்றைய தினம் இடம்பெற்ற 16 ஆவது சுற்றுப் பேச்சில், ஏற்கமுடியாத விடயங்களை கூட்டமைப்பினர் முன்வைப்பதுடன் அவற்றைச் செயற்படுத்தவும் முடியாதென அரச தரப்பு பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்ததாவது,

நாடாளுமன்ற கட்டத்தொகுதியில் இது தொடர்பாக நேற்று மாலை 3.00 மணி முதல் 5.00 மணி வரை இடம்பெற்ற பேச்சுவார்த்தை குறித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைத்தல்.மாகாணத்திற்கு சட்டம், ஒழுங்கு, பொலிஸ் அதிகாரம். அரச காணிகளை மாகாண அரசுக்கு உரித்தாக்குதல் போன்ற நாம் முன்வைத்த முக்கிய கோரிக்கைகளை ஏற்க அரசாங்கம் மறுத்துவிட்டது.

ஆனால், அந்த மூன்று கோரிக்கைகள் குறித்தும் நாம் அரச தரப்பிடம் விளக்கமளித்தோம். பேச்சுவார்த்தையின் அடுத்த சுற்று எதிர்வரும் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் ஆறுமாத காலத்திற்குள் நிரந்தரத் தீர்வு எட்டப்படும் என்ற அச்சம் காரணமாகவே இதில் அங்கம் வகிக்க கூட்டமைப்புத் தயங்குவதுடன், மேற்படி கோரிக்கைகளையும் முன்வைப்பதாக அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். நேற்றைய பேச்சில் அரசாங்கத்தின் சார்பாக அமைச்சர்களான ஜி.எல். பீரிஸ், நிமால் சிறிபாலடி சில்வா, கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், எம். ஏ. சுமந்திரன் மற்றும் சட்டத்தரணி கனக ஈஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## எங்கிருந்தார் ஜயலத் கேட்கிறார் ஹெகலிய

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்தன, இத்தனை நாள் எங்கிருந்தார் என ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல கேள்வி எழுப்பியுள்ளார்.

புலிகளின் முன்னாள் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனை இன்டர்போலிடம் ஒப்படைக்க வேண்டுமென அண்மையில் ஜயலத் ஜயவர்தன விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

சர்வதேச பொலிஸார் குமரன் பத்மநாதனுக்கு எதிராக பிடிவிறாந்து பிறப்பித்து இருபது ஆண்டுகள் கடந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஜயலத் ஜயவர்தன திடீரென விழித்துக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்

## ஜே.ஆரைப் போன்றே ரணிலும் அமெரிக்காவிற்கு சார்பானவர்




### விக்கிலீக்ஸ் தகவல்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க அமெரிக்காவுக்கு சார்பானவர் என விக்கிலீக்ஸ் இணையத்தளம் தெரிவித்துள்ளது

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர்.ஜயவர்தனவைப் போன்றே, ரணில் விக்ரமசிங்கவும் அமெரிக்காவுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணுவதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்திற்கு இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட இரகசிய தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2003ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி அமெரிக்கத் தூதுவர் அஸ்லிவில்ஸ் அமெரிக்க

(15ஆம் பக்கம் பார்க்க)

## புதுப்பொலிவு பெறவுள்ள துரையப்பா விளையாட்டரங்கு



(கொழும்பு)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அவர்களின் பணிப்புரைக்கமைய யாழ். துரையப்பா விளையாட்டு மைதானம் புதுப்பொலிவுடன் திகழும் வகையிலான நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் யாழ். வர்த்தக சங்கத்தினரால் வருடந்தோறும் வர்த்தகக் கண்காட்சி நடாத்தப்பட்டு வரும் நிலையில் இவ்வாண்டு துரையப்பா விளையாட்டரங்கில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் (15ஆம் பக்கம் பார்க்க)

## போர் முடிவடைந்த பின்னர் வடக்கில் 700 சிறுவர் மாயம்

### யுனிசெவ் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

காணாமல் போன சிறார்கள் தொடர்பான நிலை போர் முடிவுற்ற பின்னர் ஏற்பட்டுள்ள மிகப் பாரதூரமான சிறார் பாதுகாப்பு சார்ந்த சிக்கல் என யுனிசெவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின் போதும், அதற்குப் பின்னரான பாரிய இடப்பெயர்வின் போதும் பெரும் எண்ணிக்கையிலான சிறார்கள் காணாமல் போயுள்ளனர். பெற்றோர்கள் மற்றும் குடும்பங்களிலிருந்து பிரிக்கப்பட்டும் உள்ளனர் என யுனிசெவ் மேலும் தெரிவித்துள்ளது.

போர் முடிவடைந்ததிலிருந்து வடபகுதியில் 707 சிறார்கள் காணாமல் போனோர் பட்டியலில் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவர்களில் 374 ஆண் சிறார்களும், 333 பெண் சிறார்களும் அடங்குகின்றனர். காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டவர்களில் இது வரை 116 பேர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டோரில் 31 சிறார்கள் அவர்களது குடும்பங்களுடன் இணைக்கப்பட்டுள்ளனர். 22 சிறார்களைக் குடும்பங்களுடன் இணைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. 63 சிறார்களுடைய பெயர் விபரங்கள் கண்டறியப்பட்டுள்ள நிலையில் அவர்களை அடையாளப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தெரியவந்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் கைதியாக உள்ள நான் சுதந்திரமாக கதைக்க முடியாது



(கொழும்பு)

அரசியல் கைதியாக உள்ள நான் சுதந்திரமாக எதனையும் கதைக்க முடியாது. அரசியல் ஆசைகள் என்று எனக்கு இப்பொழுது எவையுமே கிடையாது. என் மக்களுக்கு ஏதாவது உதவிகளை செய்ய முடியுமாயின் அதுவே எனக்கு திருப்தியென கே.பி.என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் தெரிவித்தார். (15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு இராணுவ மயமென்ற குற்றச்சாட்டில் உண்மை இல்லை

(கொழும்பு)

வடக்கு இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை என ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரும், நல்லிணக்கம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகருமான ராஜீவ விஜேசிங்க தெரிவித்துள்ளார்.



வடக்கிற்கு நேரடியாக விஜயம் செய்வதன் மூலம் இந்த உண்மையை புரிந்து கொள்ள

(15ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா.வில் ஜனாதிபதி ஆற்றிய உரை உரிமை கோரும் பிரிட்டன் நிறுவனம்

(பிரித்தானியா)

ஐ.நாவில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிகழ்த்திய உரையை தாமே எழுதிக் கொடுத்ததாக பிரித்தானியாவின் பொது உறவுகள் நிறுவனமான பெல் பொட்டிங்கர் கூறியுள்ளது.

கடந்த ஆண்டு ஐ.நாவில் ஜனாதிபதி நிகழ்த்திய உரையில், மனிதாபிமானப் போர் தொடர்பாக மீளாய்வு செய்வதாகக் குறிப்பிட்டதுடன், விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் தமது படையினரின் நடவடிக்கைகள் குறித்தும் விபரித்திருந்தார்.

அத்துடன், பொறுப்புக்கூறும் கொள்கையை முழுமையாக வெளிப்படுத்த தாம் ஆணைக் குழு ஒன்றை நியமித்துள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# மருதங்கேணியில் வீட்டுத் திட்டம் அதிகரித்தது செஞ்சிலுவைச் சங்கம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் ஐ.எப்.ஆர்.சி.யின் நிதியுதவியுடன் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் நிர்மாணிக்கப்படும் நிரந்தர வீடுகளின் எண்ணிக்கை 510 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே குறித்த பகுதியில் ஐ.எப்.ஆர்.சி.யின் நிதியுதவியின் கீழ் 350 வீடுகளை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

இருந்தும் அப்பகுதியில் வீடுகளின் தேவை அதிகமாக இருப்பதன் காரணமாக ஐ.எப்.ஆர்.சி. மேலும் வீடுகளின் எண்ணிக்கையை 160 ஆல் அதிகரித்து 510 வீடுகளை நிர்மாணித்து வருகின்றது.

இவ்வீட்டுத் திட்டத்தில் ஒவ்வொரு வீடும் 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளதுடன், மலசல கூடத்திற்கென 25 ஆயிரம் ரூபாவும், வாழ்வாதார உதவிக்கென 75 ஆயிரம் ரூபாவும் குறித்த வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த வீட்டுத் திட்டத்திற்கு அவுஸ்ரேலிய செஞ்சிலுவைச் சங்கம் வழங்கிய நிதியினைக் கொண்டே ஐ.எப்.ஆர்.சி. இவ்வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

மேலும் இவ்வாறு ஐ.எப்.ஆர்.சி.யின் நிதியுதவியின் கீழ் தீவுப் பகுதிகளிலும் சுமார் 50 வீடுகளை அமைப்பதற்கான நடவடிக்கையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஈடுபட்டிருப்பதாக செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தார். (பா)

## பொதுக்கூட்டம்

(வேலணை)

சரித்திரப் பிரசித்தி பெற்ற வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (05)


## அருள்ஞான ஜோதிடம்

அருள் ஞானத்தால் கூறப்படும் ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடப்பது, நடக்கப்போவது இவற்றுடன் எனது அருள் ஞான ஜாதகக் கணிப்பினால் மை வெளிச்சம் போல் உங்கள் வாழ்க்கையைத் தெரிந்துகொள்ளலாம். அத்துடன் ஒருவர் என்னிடம் 4 ஜாதகங்களுக்கு மேல் கணிப்பு செய்து எடுத்தால் Gem Cooperation உத்தரவாதக் கடிதத்துடன் அவர்களுக்கு அதிஷ்டம் தரக்கூடிய அதிஷ்டக் கல்லை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.தேசப்பந்து, பேராசிரியர். P.K.சாமி J.P.ஐயா. ஸ்ரீ துர்க்காதேவி அருள் சக்தி இல்லம், இல. 23, மேபீல்ட் வீதி, கொழும்பு - 13. 011234263/64. (வீண் அலைச்சலை தவிர்க்க முன கூட்டியே அறிவித்து, அந்த நேரத்தில் மாத்திரம் வரவும். (C/1102)


# கடை உடைத்து திருட்டு பருத்தித்துறையில் பரபரப்பு

(பருத்தித்துறை)

மூன்று காவலாளிகள் கடமையிலிருந்தும் பருத்தித்துறை நகரப்பகுதியில் உள்ள 4 கடைகளில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள புடவைக் கடை ஒன்றிலிருந்து பல இலட்ச ரூபா பெறுமதியான சேலைகளும், மின்சாரப் பொருட்கள் விற்பனை நிலையத்திலிருந்து சில இலட்ச ரூபா பெறுமதியான மின்சார வயர்களும், பருத்தித்துறை சிவன் கோவில் வீதியிலுள்ள தொலைபேசி விற்பனைக் கடையில் பல இலட்ச ரூபா பெறுமதியான தொலைபேசிகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் வானொலிகள் மற்றும் ஹாட்வெயர் கடையொன்றில் பல இலட்ச ரூபா பெறுமதியான பெயின்ற் வகைகளும் களவாடப்பட்டுள்ளன.

இதேவேளை, கடைகளின் பாதுகாப்புக்கென ஒவ்வொரு கடைகளும் தலா 1500 ரூபா வர்த்தக சங்கத்திற்கு வழங்கி வருகின்றனர்.

இந்த நிலையில் வர்த்தகர்கள், வர்த்த சங்கத்திடம் நஷ்டஈடு கோரியுள்ளனர் என்றும் தெரியவருகிறது. (116)

# யாழ். கூட்டுறவு அபிவிருத்தி 70 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மக்கள் மீள்குடியமர்ந்த பல பிரதேசங்களில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை திருத்தியமைக்கவென அரசாங்கத்தினால் 70 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் 47 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ். மாவட்டத்தில் கூட்டுறவை அபிவிருத்தி செய்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகவும் அரச அதிபர் குறிப்பிட்டார்.

இதேவேளை கூட்டுறவுத் துறையினரும் மீள்குடியமர்ந்திருக்கும் யாழ். மக்களுக்கு தம்மாலான உதவிகளை செய்ய முன்வர வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கடந்த காலங்களில் உலக உணவுத் திட்டத்தின் கீழ் உலருணவுப் பொருட்கள் விநியோகத்தின்போது ப.நோ.கூ. சங்கங்களுக்கு வாகனக்கூலி செலுத்தப்பட்டிருக்கவில்லை.

இதனால் உலக உணவுத் திட்ட அதிகாரிகளுடன் இவ்விடயம் குறித்து பேசி அவர்களுக்கு வழங்கவேண்டிய தொகையில் 6 மில்லியன் ரூபாவைப் பெற்றுக்கொடுத்துள்ளதாகவும், மிகுதித் தொகையினையும் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்மூலம் ப.நோ.கூ. சங்கங்களின் நட்டமடையும் வீதத்தைக் குறைக்கமுடியுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# திருநெல்வேலியில் வைரஸ் காய்ச்சல்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் அடுத்தடுத்த அயல் வீடுகளிலிருந்த 15 பேர் வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர். ஒருவருக்கு ஏற்பட்ட இக்காய்ச்சல் இரண்டு நாட்களுக்கிடையில் மற்றவர்களுக்கு தொற்றியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுத் திரும்பியுள்ளனர். ஏனையவர்கள் தனியார் வைத்தியர்களிடம் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வைரஸ் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள் உடனடியாக வைத்திய சிகிச்சையை மேற்கொள்ள வேண்டும் என நல்லூர் சுகாதாரப் பகுதியினர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இதுதவிர திருநெல்வேலி கலாசாலை வீதிப் பக்கமாகவும், பாற்பண்ணை பகுதியிலும் நுளம்புகள் பெருகும் வகையில் குப்பைக் கழிவுகள் வெற்றுக்காணிக்குள் கொட்டப்பட்டிருப்பதாக நல்லூர் சுகாதாரப் பரிசோதகர் ஜீ.மதனகுமார் தெரிவித்துள்ளார்.

நுளம்புகள் பெருகும் வகையில் இக்குப்பைகளை பொறுப்பற்ற முறையில் கொட்டுபவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (137)

# பஸ் நிலையம் இல்லை பயணிகள் பெரும் அவதி

(கிளிநொச்சி).

கிளிநொச்சி மாவட்டத்தின் தனியார் பேருந்து நிலையம் மீள்குடியேற்றத்தின் பின் இன்று வரை ஒரு நிரந்தர இடமின்றி கிளிநொச்சி டிப்போ சந்திக்கு அருகில் கனகபுரம் வீதியில் இயங்கி வருகிறது. மிகக்குறுகிய இடத்தில் வீதியின் இருமருங்கிலும் பேருந்துகளை தரித்து வைத்து பயணிகளை ஏற்றி இறக்கி சேவைகளை மேற்கொள்ளவதனால் போக்குவரத்திற்கு நாளாந்தம் இடையூறு ஏற்படுத்தப்பட்டு வருகிறது சில வேளைகளில் விபத்துக்களும் ஏற்படுகின்றன. அத்தோடு குறித்த இடத்தில் ஒரு சிறிய கொட்டகையேனும் காணப்படாத நிலையில் பயணிகள் மழைக்கோ அல்லது வெயிலுக்கோ ஒதுங்கமுடியாத நிலையிலும் பெரும் அசௌகரியங்களை சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலைமையினை விரைவில் மாற்றியமைத்து கிளிநொச்சி தனியார் பேருந்து நிலையத்திற்கு பொருத்தமான நிரந்தர இடத்தினை ஒதுக்கி நிரந்தர கட்டட வசதிகளையும் ஏற்படுத்தி தருமாறு மாவட்ட தனியார் பேருந்து கழகத்தினர் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (29)


## சிறு விளம்பரம்

**டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (C/1051)


## குழந்தை மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த 7 மாத குழந்தையொன்று நேற்றுக்காலை திடீரென மரணமாகியுள்ளது. அராலி கிழக்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கே.சிவகுகநியா என்ற பெண் குழந்தையே இவ்வாறு மரணமாகியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.


மக்கள் வங்கியின்
சுன்னாகம் கிளையுடன் இணைந்த
அளவெட்டி சேவை நிலைய

**திறப்பு விழா**

இன்று 2011.12.07ம் திகதி புதன்கிழமை
காலை 9.00 மணிக்கு

வடமாகாண ஆளுநர்
மேஜர். ஜெனரல் G.A. சந்திரசிறி
அவர்களால் வைபவரீதியாகத் திறந்துவைக்கப்படவுள்ளது.

சிறப்பு விருந்தினர்களாக,
திரு. L. இளங்கோவன்
(வடமாகாண ஆளுநரின் செயலாளரும்,
வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரும்)

திரு. S. முரளீதரன்
(பிரதேச செயலாளர், வலி. வடக்கு)
ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நாடு முழுவதிலுமுள்ள கிளைகள், சேவை நிலையங்களுடன் வலையமைப்பில் இணைந்த இந்த சேவை நிலையத்தில்,

- விவசாயக் கடன்
- சுயதொழில் முயற்சிக்கான கடன்
- வீடமைப்புக் கடன்

போன்ற கடன் வசதிகளையும் ஏனைய வங்கிச் சேவைகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பதனையும் உங்களிற்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"மக்கள் மனமறிந்த வங்கி மக்கள் வங்கி"

-யாழ் பிராந்திய மக்கள் வங்கியினர்-

(C/1111)

AAA-Brand Finance Rating, AA' (lkl) Fitch Rating

மக்கள் வங்கி

தெளிந்த ஆற்று நீர் அருகே இருக்கும் போது சாக்கடை நீரை தாழ்ந்த மக்களுக்காக, நாம் குடிக்கக்கொடுத்து வருகிறோம். நிறைந்த செல்வத்தின் மத்தியில் இருந்து கொண்டு கோடானு கோடி மக்களை நாம் பட்டினி போட்டு வாட்டுகிறோம்.

- சுவாமி விவேகானந்தர்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## நீங்கள் கண்காணிக்கப்படுகிறீர்கள்!

நமது மனதின் யோசனைகளை, அந்தக் குரங்குத் தாவல்களை நாம் வாயைத் திறந்து சொன்னால் ஒழிய மற்றவர்கள் அறிந்து கொள்ள முடியாது என்றவகையில் நாம் படைக்கப்பட்டிருப்பதற்காக, இறைவனோ இயற்கையோ தற்செயலோ அந்த காரணிக்கு நன்றி செலுத்தாதவர் இருக்க முடியாது. நமது மனதை ஒளித்துக்கொள்ளும் வசதி செய்து தந்த பெருங்கருணையை வியந்துதானாக வேண்டும்.

நமது மனதின் கூத்துக்களை அறிந்த நமக்கு, அது மற்றவர்களுக்குத் தெரியாது என்ற நினைப்பே ஒரே ஆசுவாசம்! அந்த நினைப்பிலும் மண் விழுந்தால் எப்படியிருக்கும்? நவீன வசதிகளும் தொழிநுட்பக் கருவிகளும் நம்மை அந்த ஆபத்து நோக்கியே அழைத்துச் செல்கின்றன.

கிட்டத்தட்ட எல்லா நாட்டு அரசாங்கங்களும் விண்ணில் வலம் வர ஏவி விட்டிருக்கும் – ஏவி விடப்போகும் சற்றலைற்கள் ஏறக்குறையக் கடவுள்களின் இடத்தைப் பிடித்துவிட்டன. அவரைப் போலவே மேலிருந்து நம்மைக் கண்காணித்தபடி இருக்கின்றன. கடவுளாவது யாருக்கும் நம்மைப் பற்றிச் சொல்ல மாட்டார் என்ற நம்பிக்கை இருந்தது. சற்றலைற்கள் மற்றும் புதிய தொழிநுட்பங்கள் விஷயத்தில் அந்த நம்பிக்கையும் நம்மைக் கைவிட்டு விட்டது.

இந்த உளவறியும் தொழிநுட்பங்களால் அரசாங்கங்களுக்கெதிராக ஆயுதப் போராட்டங்கள் இனி சாத்தியமில்லை என்று ஆகிவிடடது ஒருபுறமிருக்க, ஒவ்வொரு தனிமனிதனதும் அந்தரங்கம் என்று எதுவுமில்லாமல் ஆகிவருகிறது. எதிரிகளை மட்டுமன்றி, நாட்டில் நிலவும் உட்பகை குறித்தும் அரசாங்கங்கள் உளவு பார்ப்பது பரவலாக ஏற்கப்பட்டுவிட்டது. ஆனால், ஒவ்வொரு மனிதனையும் ஒற்றுப் பார்த்து, அவர்தம் அந்தரங்க விவகாரங்களையும் தெரிந்துகொள்வது சரியா?, இது ஒரு அரசின், குறிப்பாக மக்களாட்சியின் இறையாண்மைக்குப் பொருந்துமா? இந்தக் கேள்வியை எழுப்பியிருப்பவர், இன்று அரசாங்கங்களையே ஒற்றுப் பார்த்து உலகைக் கலக்கிய விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே.

லண்டனில் ஒரு நிகழ்ச்சியில் பேசிய அவர், அங்கு வந்திருந்த மக்களிடம், "நீங்கள் பயன்படுத்தும் செல்போனும் உளவு பார்க்க உதவி செய்கிறது. மக்கள் அனைவரையும் அரசாங்கம் உளவு பார்க்கிறது" என்று கூறியிருக்கிறார். இத்தகைய உளவு பார்க்க உதவும் தகவல் தொழிலநுட்பக் கருவிகளை மேலை நாட்டைச் சேர்ந்த நிறுவனங்கள் புதிது புதிதாகத் தயாரித்து விற்றுக் கொண்டிருக்கின்றன. யாரும் வாங்க முடியும்.

இந்திய அரசின் சிபிஐ அனுப்பும் மின்கடிதங்கள் அனைத்தையும் சீனா ஆறு வருடங்களாகப் படித்துக் கொண்டிருக்கிறது என்றும் அசாஞ்சே சொல்லியிருக்கிறார். அனைத்து மக்களையும் உளவு பார்க்க முடியும், செல்போனும் இணையதளமும் அதை சாத்தியம் ஆக்குகிறது என்பதை ஆதாரங்களுடன் அறியும்போது, ஆச்சரியமும் அதை விட கூடுதலாக அச்சமும் உண்டாகிறது.

இத்தகைய உளவு பார்க்கும் தகவல்தொழில்நுட்ப வசதியால் தனிமனித அந்தரங்கம் என்பதே இனி இல்லை. இந்த உளவுத் தொழில்நுட்பம், தங்களுக்குப் போட்டியாக உள்ள மற்றொரு நிறுவனத்தைக் கண்காணிக்க, ஓர் அரசியல் கட்சி இன்னொரு அரசியல் கட்சியை வேவு பார்க்கவெல்லாம் பயன்படலாம்.

மின்அஞ்சல், செல்போன் இரண்டையும் எவராலும் உட்புகுந்து கண்காணிக்க முடியும். செல்போனும் இணையதளமும் பாதுகாப்பான நடைமுறைகள் அல்ல என்பதை இந்தத் தொழில்நுட்பம் நமக்குப் புரிய வைத்துள்ளது. ஆனால், இவை இல்லாமல் இனி எந்தவொரு தனிமனிதனாலும் செயல்படவே முடியாது என்கிற அளவுக்கு தகவல் தொழில்நுட்பத்தின் பொன்விலங்கை விரும்பியே மனித இனம் பூட்டிக்கொண்டாகிவிட்டது. இன்று நமக்கு சகலவற்றுக்கும் இணைய தளம் அவசியமாகிவிட்டது. இனி பின்னோக்கிச் செல்லுதல் இயலாது.

இணைய தளத்தில் உங்களுக்கு அறிமுகம் இல்லாதவர் அனுப்பும் மின்அஞ்சலை ஆர்வத்தால் திறந்தாலே போதும், அதில் நமது தகவல்கள் அனைத்தையும் உறிஞ்சிக்கொள்ளும் உளவு மென்பொருள்கள் உள்ளன என்று தெரிந்தாலும் அதை விடமுடியவில்லை. ∴பேஸ்புக் பகுதியில் யார் வேண்டுமானாலும் நுழைய முடியும் என்றாலும், அனைத்துத் தகவல்களையும் அதில் கொட்டிவிடாத ஆட்கள் மிகக் குறைவு. இந்தத் தொழில்நுட்பம் இல்லாமல் இருக்க முடியாது, வாழவே முடியாது என்கின்ற நிலைமை உருவாக்கப்பட்டுவிட்டது.

நமக்கினி அந்தரங்கம் இல்லை. நாம் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

- ஆசிரியர்

# அபிவிருத்தி நடவடிக்கையால் மக்களின் பிரச்சினைகள் தீர்க்க முடியாத நிலை

(திருகோணமலை)

திருகோணமலை சம்பூரில் அனல் மின்சார நிலையம் அமைக்கப்படவுள்ளமையால் அங்கு மக்களை மீளக்குடியமர்த்த முடியாது என்று திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் டி.டி..ஆர். டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர் குறித்த மின்சார நிலையப் பகுதியில் மக்களை குடியமர்த்துவது ஆபத்தை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளார்.

சம்பூர் மக்களை வேறு இடத்தில் குடியமருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் அவர்கள் அதற்கு மறுப்பு வெளியிட்டு வருகின்றனர். எனவே அந்த மக்களின் பிரச்சினை இன்று சர்வதேசப் பிரச்சினையாக மாறியுள்ளது என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை குச்சவெளியில் அரசாங்கம் உப்புத்தொழிற்சாலை ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதன்காரணமாக நூற்றுக்கணக்கான மீனவர்கள் தமது தொழில்களை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், கப்பற்துறை பகுதியில் சுமார் 700 ஏக்கர் நெல்வயல் பிரதேசத்தில் செய்கை பண்ணக்கூடாது என்று உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த இரண்டு பிரச்சினைகள் குறித்தும் கருத்து வெளியிட்ட அரசாங்க அதிபர், இது ஜனாதிபதி உட்பட உயர் அரசாங்கத்தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமாகும் என்று குறிப்பிட்டார்.

# மருத்துவ சபை உருவாக்கும் தீர்மானம் அரசாங்க மருத்துவ சங்கம் எதிர்ப்பு

இலங்கையில் சுயமாக இயங்கும் மருத்துவ சபையை பொதுத்துறை நிறுவனமாக மாற்றும் முயற்சிக்கு இலங்கை அரசாங்க மருத்துவர் சம்மேளனம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்த நடவடிக்கை இலங்கையின் சுகாதாரத் துறையை செயலிழக்கச்செய்யும் என்று அரசாங்க மருத்துவர் சம்மேளனம் எச்சரித்துள்ளது.

மருத்துவத்துறையினரின் அனுமதியில்லாமல் இவ்வாறான நடவடிக்கை எதையும் எடுக்கப்படக் கூடாது என்றும் அந்தச் சம்மேளனம் கோரியுள்ளது. மருத்துவ சபையை பொதுத்துறை நிறுவனமாக மாற்றி அதற்கு சர்ச்சைக்குரிய ஒருவரை தலைவராக நியமிக்கும் ஒரு வேலைத்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளதாக இலங்கை அரசாங்க மருத்துவ சம்மேளனம் சுட்டிக்காட்டியுள்ளது.

# வடமாகாண முதலமைச்சர் பதவி போட்டியிட மறுத்தார் ஸ்ரீரங்கா

(கொழும்பு)

வடமாகாணத்தின் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிட முன்வருமாறு அரசு விடுத்த வேண்டுகோளை நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்கா நிராகரித்திருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாண முதலமைச்சர் பதவிக்கு ஆளுங் கட்சியின் அமைச்சர் ஒருவரே நியமிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்பட்ட சூழ்நிலையில், ஆளுங் கட்சியின் முக்கிய பிரமுகர்கள் சிலர், ஸ்ரீரங்காவை முதலமைச்சர் வேட்பாளராக நியமிக்குமாறு வலியுறுத்துகின்றனர்.

இதனடிப்படையில் இந்த விடயம் குறித்து ஆளுங் கட்சி அரசியல் பிரமுகர்கள் சிலர் ஸ்ரீரங்காவுடன் தொடர்பு கொண்டு விரிவாகக் கலந்துரையாடினர் எனத் தெரிகிறது. எவ்வாறாயினும் அரசின் இந்தக் கோரிக்கையை அவர் நிராகரித்திருக்கிறார் என அறிய முடிகிறது.

# அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் நிலவுகின்ற அதிபர்களின் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக பிரதிக் கல்வியமைச்சர் விஜித் விஜியமுனி சொய்சா தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சுக்களுக்கான நிதியொதுக்கீடுகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் அதிபர்களுக்கான 5 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதுதவிர ஆசிய பசுபிக் பிராந்திய ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை இலங்கையில் ஸ்தாபிக்க உத்தேசித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போலிக் கடவுச்சீட்டில் பயணம் செய்தவர் திருச்சி விமான நிலையத்தில் கைது

போலிக் கடவுச்சீட்டு மூலம் இலங்கைக்கு வர முற்பட்ட ஒருவர் இந்திய திருச்சி விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்பர்லேக் பகுதியைச் சேர்ந்தவர் முகமது சரீப். இவரது மகன் முகமது சப்ராப் (வயது 26). இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட இவ்ர் துணி வியாபாரமும் செய்து வருகிறார். வியாபார சம்பந்தமாக இவர் அடிக்கடி தமிழகத்திற்குச் சென்று வருவார். இதேபோல் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் தமிழகம் சென்ற இவர் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இலங்கைக்கு திரும்பிச் செல்லாமல் தமிழகத்திலேயே தங்கி விட்டார். விசா முடிந்த பின்னர் அவர் மீண்டும் இலங்கைக்கு வருவதற்கு இந்திய மாநகர பொலிஸ் ஆணையாளரிடம் சிறப்பு அனுமதி பெற வேண்டும். இவ்வாறு அனுமதி பெற்றால் மட்டுமே அவர் முறையாக இலங்கைக்கு திரும்பிச் செல்ல முடியும்.

ஆனால் முகமது சப்ராப் இவ்வாறு முறையாக செய்யாமல் இங்குள்ள ஒரு முகவரை தொடர்பு கொண்டு புதிதாக ஒரு போலிக் கடவுச் சீட்டைத் தயார் செய்து இலங்கையில் இருந்து சென்னை வழியாக தமிழகத்திற்கு வந்தது போன்று போலியாக ஒரு முத்திரையையும் பதித்துள்ளார். இந்த போலிக் கடவுச் சீட்டை வைத்து கடந்த ஞாயிறு நள்ளிரவு திருச்சி விமான நிலையத்தில் இருந்து இலங்கைக்கு வரும் தனியார் விமானம மூலம் இங்குவர முயன்றார். அப்போது விமான நிலைய குடிவரவு துணை பொலிஸ் அதிகாரி, அவரது கடவுச் சீட்டை வாங்கி ஆய்வு செய்தபோது மேற்கண்ட விவரங்கள் தெரிய வந்தது. இதனையடுத்து முகமது சப்ராப் அருகில் உள்ள விமான நிலைய பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

# கொழும்பில் விசேட பாதுகாப்பு

கொழும்பு மற்றும் சன நெரிசல் மிக்க பிரதேசங்களில் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அறிவித்துள்ளனர். பாதுகாப்பு ஏற்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில் மேலதிக பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்த உத்தேசித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சீருடையிலும், சாதாரண உடையிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பண்டிகைக் காலத்தில் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுவதனால் மக்கள் தங்களது உடமைகள் குறித்து கூடிய விழிப்புணர்வுடன் இருக்க வேண்டுமென பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆன்மீக நிகழ்வு


(பருத்தித்துறை)

தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ஆன்மீக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

இதன் பிரகாரம் எதிர்வரும் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய பூசைகள் நிறைவடைந்ததும் ஆச்சிரம மண்டபத்தில் "கலியுகத்தில் கந்தனே கண்கண்ட தெய்வம்" எனும் பொருளில் யாழ். பல்கலைக்கழக உப விடுதிக் காப்பாளர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வராவின் சொற்பொழிவு இடம்பெறுவதுடன் 63 நாயன்மார் பூசையுடன் மகேஸ்வர பூசையும் இடம்பெறும் என ஆச்சிரம மடாதிபதி எஸ். மோகனதாஸ் தெரிவித்துள்ளார். (116)

# அமரர் வீரசிங்கத்தைப்போல் இன்று வரை கூட்டுறவுத்துறையில் எவரும் தோன்றவில்லை

## தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் பந்து ரனவக்க



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு மட்டுமல்லாது முழு இலங்கையையும் கூட்டுறவுச் சேவையில் அபிவிருத்தி செய்த பெருமை கூட்டுறவாளர் வீரசிங்கத்தையே சாரும் என இலங்கை தேசிய கூட்டுறவு சபையின் தலைவர் பந்து ரனவக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவாளர் வீ. வீரசிங்கத்தின் 47ஆவது நினைவு தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், தமக்குத் தெரிந்த வகையில் அவர் 19 வயதிலே ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கியது முதல் கல்வித்துறைக்கும் கூட்டுறவுத்துறைக்கு, சமுகத்திற்கும் சிறந்த தொண்டாற்றியிருக்கிறார். இவரைப் போல் ஒரு பெரியார் எமது கூட்டுறவுத்துறையில் தோன்றவில்லையெனவும் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் இ.ராஜாராம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் திருவுருவப்படத்திற்கு இலங்கை தேசிய கூட்டுறவு சபைத் தலைவர் மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து 89ஆவது தேசிய கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட பல்வேறு மட்டப் போட்டி நிகழ்வுகளில் பரிசுபெறும் கூட்டுறவாளர்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனர்களுக்கான சான்றிதழ் மற்றும் கேடயங்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் வழங்கிக் கௌரவித்தார்.

சிறந்த 'கூட்டுறவுநகர்' விற்பனை நிலையத்திற்கான முதலாம் இடத்தை உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும், சிறந்த உள்ளூர் உற்பத்தி விற்பனையில் முதலாம் இடத்தை பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கமும் தட்டிக் கொண்டன. இவற்றிற்கான பரிசில்களை யாழ். அரச அதிபர் வழங்கிச் சிறப்பித்தார்.

கூட்டுறவாளர் வீரசிங்கத்தின் நினைவுப் பேருரையை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிககற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் தி. வேல்நம்பி ஆற்றினார்.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள், கூட்டுறவாளர்கள், இலங்கை தேசிய கூட்டுறவு சபையின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய கோரிக்கை மனு ஒன்றும் தலைவர் இ. இராஜாராமினால் யாழ். அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (பா)

# க.பொ.த.சாதாரண பரீட்சை 2011 நேர அட்டவணை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தர எழுத்துப் பரீட்சை நேர அட்டவணை பாடசாலைகளுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர அனுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

நேர அட்டவணை விபரம் வருமாறு:

12-12-2011 திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் 11. 30 மணி வரை பௌத்த சமயம், சைவநெறி, கத்தோலிக்க சமயம், கிறிஸ்தவம், இஸ்லாம் வினாத்தாள் I, II.

13-12-2011 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் 11. 30 மணி வரை சிங்கள மொழியும், இலக்கியமும், தமிழ் மொழியும் இலக்கியமும் வினாத்தாள் I, II, 12.30 மணி முதல் 14.30 மணி வரை சிங்கள மொழியும், இலக்கியமும் தமிழ் மொழியும் இலக்கியமும் வினாத்தாள் III.

14-12-2011 புதன்கிழமை காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை வரலாறு வினாத்தாள் II. 12.30 மணி முதல் 13.30 மணி வரை வரலாறு வினாத்தாள் I.

15-12-2011 வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் 11. 30 மணி வரை விஞ்ஞானம் வினாத்தாள் II. 12.30 மணி முதல் 13.30 மணி வரை விஞ்ஞானம் வினாத்தாள் I.

16-12-2011 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் 9. 30 மணி வரை ஆங்கில மொழி வினாத்தாள் I. 9.45 மணி முதல் 11. 45 மணி வரை ஆங்கில மொழி வினாத்தாள் II.

17-12-2011 சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை தகவல் தொடர்பாடலும், தொழினுட்பவியலும், விவசாயமும் உணவுத் தொழினுட்பவியலும், கடற்றொழிலும், உணவுத் தொழினுட்பவியலும், ஆக்கத்திறனும் தொழினுட்பவியலும் வினாத்தான் I,II. 12.30 மணி முதல் 15.30 மணி வரை நுண்கலை, மனைப் பொருளியல், சுகாதாரமும் உடற்கல்வியும், தொடர்பாடலும் ஊடகக்கற்கையும், மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தும் (சிங்களம்), மின் ஆவணப்படுத்தலும் சுருக்கெழுத்தலும் (தமிழ்), மின் ஆவணப் படுத்தலும் சுருக்கெழுத்தும் (ஆங்கிலம்) வினாத்தாள் II,I.

19.12-2011 திங்கட்கிழமை காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரை கணிதம் வினாத்தாள் I. 12.30 மணி முதல் 15.00 மணி வரை கணிதம் வினாத்தாள் II.

20-12-2011 செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் 11.30 மணி வரை சங்கீதம் (கீழைத் தேயம்), சங்கீதம் (மேலைத் தேயம்), சங்கீதம் (கர்நாடகம்), நடனம் (சுதேச), நடனம் (பரதம்) வினாத்தாள் I, II. காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை சித்திரம் வினாத்தாள் I., 9.46 மணி முதல் 11.45 மணி வரை சித்திரம் வினாத்தாள் III.

12.30 மணி முதல் 15.30 மணி வரை இங்கிலய நயம் ஆங்கிலம், இலக்கிய நயம் சிங்களம், இலக்கிய நயம் தமிழ், இலக்கிய நயம் அரபு, நாடகமும் அரங்கியலும் (சிங்களம்), நாடகமும் அரங்கியலும் (தமிழ்), நாடகமும் அரங்கியலும் (ஆங்கிலம்) வினாத்தாள் I,II. 13.15 மணி முதல் 15. 15 மணி வரை சித்திரம் வினாத்தாள் II.

21-12-2011 புதன்கிழமை காலை 8.30 மணி முதல் 11. 30 மணி வரை வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும், புவியியல், குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம், முயற்சியாண்மைக் கற்கை, இரண்டாம் மொழி (சிங்களம்), இரண்டாம் மொழி (தமிழ்) வினாத்தாள் I, II.

காலை 8.30 மணி முதல் 11. 30 மணி வரை பாளி, சமஸ்கிருதம், பிரெஞ்சு, ஜேர்மன், ஹிந்தி, ஜப்பான், அரபு.

# கோம்பாவில் மரக்கறி சந்தை அரச காணியில் இயங்குகிறது

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - கோம்பாவில் பாண்டியன் சந்திக்கு அருகாமையில் இயங்கிவந்த மரக்கறி சந்தை இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கி வருகிறது.

பாண்டியன் சந்திக்கும் முன்னர் சந்தை இயங்கிவந்த இடத்திற்கும் இடைப்பட்ட அரச காணியிலேயே தற்காலிகமாக சந்தை இய்ங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் முயற்சியி னால் இது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மரக்கறி வாணிப வர்த்தகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு கோம்பாவில் பகுதியில் இரண்டாம் கட்ட மீள்குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் குடியேறிய பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு தற்போதைய சந்தையில் மேலும் பல கடைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. முன்னர் அடிப்படை வசதிகள் இன்றி போக்குவரத்துச் செய்யும் வீதியின் முன்னரங்க நிலையில் சந்தை அமைந்திருந்ததால் பொதுமக்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியதோடு வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு ஏதுவாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ.ப)

# யாழ். நகர உணவகங்களில் தொடரும் சுகாதாரச் சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட உணவகங்களில் சுகாதார சீர்கேடுகள் அதிகமாக இடம்பெறுவதாக பொது மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுகிறது.

குறிப்பாக, நரகப் பகுதியிலுள்ள உணவகங்கள் மற்றும் புறநகர் பகுதியிலுள்ள உணவகங்களிலுமே மேற்படி சுகாதார சீர்கேடுகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன.

பழைய உணவுகளை சூடுகாட்டி விற்றல், உணவு பரிமாறும் பாத்திரங்கள் சுத்தப்படுத்தப்படாமை, உணவு பரிமாறும் பணியாளர் சீருடையின்மை, மலசலகூட நீர் முறையாக வெளியேற்றப்படாமை காரணமாக துர்நாற்றம் வீசுவதுடன் சுகாதார சீர்கேடும் இடம்பெறுகிறது.

சில உணவகங்களில் புகைத்தல் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் அங்கு உணவு உண்ணவரும் பொதுமக்களும் வெகுவாகப் பாதிப்படைகின்றனர். இவ்விடயம் குறித்து உரிய அதிகாரிகள் கவனம் எடுப்பதில்லை என மக்கள் விசனமடைந்துள்ளனர். இதனைத் தடுக்க முறையான நடவடிக்கை எப்பது அவசியம் என பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (எப்.எஸ்)



கூட்டுறவுப் பெரியார் அமரர் வி. வீரசிங்கத்தின் 47ஆவது நினைவு தினம் கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது, அமரரின் திருவுருவப்படத்தையும், யாழ். மாவட்ட கூட்டுறவு சபைத் தலைவர் இ. இராஜாராம் உரையாற்றுவதையும், யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கூட்டுறவாளர் தினப் போட்டியில் முதலாமிடம் பெற்ற சங்கம் ஒன்றுக்கு கேடயம் வழங்குவதையும், விழாவில் கலந்து கொண்டோரையும் காணலாம். (படம் : பார்த்தீபன்)

# வலிகாமம் கிழக்கு பிரதேச அபிவிருத்திக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிதி ஒதுக்கீடு

(கோப்பாய்)

இவ்வாண்டு பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் வலி.கிழக்கு கோபபாய் பிரதேச செயலகத் திற்குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்தித் திட்டங்களுக்கென யாழ். மாவட்டத்தின் 8 நாடாளு மன்ற உறுப்பினர்களால் 34 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 2 கோடி 50 இலட்சத்து 2 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி ஈ.பி.டி.பி கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா 8 திட்டங்களுக்கு 3 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாவும், மு.சந்திரகுமார் ஒரு திட்டத்திற்கு 97 ஆயிரம் ரூபாவும், சில்வேஸ்திரி அலென்ரீன் 6 திட்டங்களுக்கு 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

தமிழ்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன் 11 திட்டங்களுக்கு 10 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவும், மாவை சேனாதிராசா 3 திட்டங்களுக்கு 2 இலடசத்து 75 ஆயிரம் ரூபாவும், அப்பாத்துரை விநாயகமூர்த்தி ஒரு திட்டத்திற்கு ஒரு இலட்சம் ரூபாவும், சிவஞானம் ஸ்ரீதரன் ஒரு திட்டத்திற்கு 75 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

மேலும் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான விஜயகலா மகேஸ்வரன் 3 திட்டங்களுக்கு 2 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கீடு செய்துள்ளார். (135)



மணியந்தோட்டம் உதயபுரம் மக்களுக்கு தறப்பாள்கள் வழங்கும் நிகழ்வில் ஈ.பி.டி.பியின் நல்லூர் அமைப்பாளரும், நல்லூர் பிரதேச எதிர்க்கட்சித் தலைவருமான அ.ரவீந்திரன் அரியாலை தென்கிழக்கு கிராம அலுவலர் ம.ஞானேந்திரன், நல்லூர் பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் எஸ்.சண்முகநாதன் ஆகியோருடன் தறப்பாள்கள் வழங்கப்பட்ட மக்கள் நிற்பதைக் காணலாம்.

# தென்பகுதியிலிருந்து மரக்கறி விலையில் திடீர் விழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியில் இருந்து அதிகளவிலான மரக்கறி வகைகள் யாழ். குடாநாட்டிற்கு தினமும் எடுத்து வரப்படுகின்றன.

அண்மையில் பெய்த கடும் மழையினால் யாழ். குடாநாட்டில் மரக்கறிப் பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து குடாநாட்டுச் சந்தைகளில் அதன் விலைகள் கிடுகிடுவென அதிகரித்துள்ளது. இந்த விலை அதிகரிப்பை அடுத்து தம்புள்ளயிலிருந்த வியாபாரிகள் மரக்கறி வகைகளைப் போதியளவு யாழ். மாவட்டத்திற்கு தினமும் எடுத்து வருகின்றனர்.

கத்தரிக்காய், பூசணி, கரட், லக்ஸ், தக்காளிப்பழம், போஞ்சி, பச்சைமிளகாய் போன்ற மரக்கறி வகைகள் தினமும் கூடுதலாக வந்து சேர்வதால் அவற்றின் விலைகள் திடீரெனக் குறைந்து காணப்படுகின்றன. (இ)

# நம்பிக்கையாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியில் அமைந்துள்ள சின்னப்பள்ளிவாசலுக்கு புதிய நம்பிக்கையாளர்கள் நியமனம் பெற்றுள்ளார்கள்.

1990 ஆம் ஆண்டிலிருந்து சேதமான நிலையில் உள்ள இப்பள்ளிவாசலை மீள அமைத்து தொழுகை வணக்கதலங்களை மேற்கொள்வதற்காக முஸ்லிம் சமய கலாசார பண்பாட்டலுவல்கள் திணைக்களம் 15 பேர் கொண்ட நம்பிக்கையாளர் சபையை உருவாக்கியுள்ளது. இச் சபையில் யாழில் மீள் குடியேறியுள்ளவர்களும், வெளி மாவட்டத்தில் வதியும் இப்பள்ளியின் மஹல்லா வாசிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர். (105)

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

07.12.2011- புதன்கிழமை)

பஞ்சாங்கக் குறிப்புக்கள்
கர வருஷம்
கார்த்திகை 21 ஆம் நாள்.
இராகுகாலம் 12.17-1.47, சுபநேரம் 4.47 -6.17 வரை
நட்சத்திரம்: அச்சுவினி மு.ப 12.49 வரை
திதி: துவாதசி பி.ப 3.33 வரை.
பிரதோஷ விரத நன்னாள்.

இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது

மேடம்:- பணக் கஷ்டம், எதிரியை வெல்லுதல், துர்அதிர்ஷ்டம், கடன் வாங்குதல், உடம்பு நற்சுகம்.

ரிஷபம:- குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், அதிர்ஷ்ட நாள், தேகம் சுகம், அதிகாரப் போட்டி.

மிதுனம் :- பணக் கஷ்டம், நினைத்ததைச் சாதித்தல், தொழில் முடக்கம், வீண் வதந்தி, தேகம் பலவீனம்.

கடகம்:- குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், தொழிலில் ஆதாயம், எதிரியை வெல்லுதல், தேகம் சுகம்.

சிம்மம்:- பணக் கஷ்டம், குடும்பத்தில் குரோதம், தொழில் முடக்கம், சகோதர உதவி, உடல் நலம்.

கன்னி :- குடும்பத்தில் குதூகலம், காசு வரும், பிணக்குத் தீர்தல், வேண்டாத செயல், தேகம் பலவீனம்.

துலாம் :- பணக் கஷ்டம், அதிகாரப் போட்டி, அற்பர் நேசம், வீண் அலைச்சல்.

விருச்சிகம்:- குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், அதிர்ஷ் நாள், பிரதான தீர்மானம், உடம்பு நலம்.

தனுசு:- பணக் கஷ்டம், சுற்றத்தார் ஆதரவு, சகோதரர் வெறுப்பு, உடல் உபாதை, விபத்து வரும் கவனம்.

மகரம:- குடும்பத்தில் மகிழ்ச்சி, பணம் வரும், அயல் வீடு பகை, விருந்துபசாரம், உல்லாசப் பயணம்.

கும்பம் :- பணக் கஷ்டம், அதிகாரப் போட்டி, நினைத்ததைச் சாதித்தல், வீண் கவலை, தேகம் சுகம்.

மீனம் :- குடும்பத்தில் குதூகலம், பணம் வரும், வீண் அலைச்சல், உடம்பு நற்சுகம், சகோதரர் உதவி.

# நுளம்பு பெருகுவதற்கு உதவிய எட்டுப் பேருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் நீர் தேங்கி நின்று நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாகச் செயற்பட்டதற்காக எட்டுப் பேர் மீது யாழ். பொலிஸாரால் யாழ். நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

தற்போது மழைகாலம் என்பதால் மழைநீர் தேங்கி நின்று நுளம்பு பெருகும் விதத்தில் பவிககப்பட்ட வெற்றுக் கொள் கலன்கள், ரயர் என்பவற்றை வளவுகளில் விட்டிருந்ததால் குறித்த நபர்கள் மீதே யாழ். பொலிஸார் இவ்வழக்குகளைப் பதிவு செய்தனர்.

நேற்றுமுன்தினம் இவ் வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் ஏ.ஏ.ஆனந்தராசா குற்றவாளிகளுக்கு தலா 1000 ரூபா குற்றப்பணம் செலுதத வேண்டும். இல்லையேல் ஒரு மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார்.

தற்போது யாழ். குடாநாட்டில் டெங்கு நோயினைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பொருட்டு பல்வேறு தரப்பினரும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

# சிறப்பாக நடைபெற்ற பாடநூல் வழங்கும் நிகழ்வு

(கிளிநொச்சி)

வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கு 2012 ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல் விநியோகிக்கும் விழா நேற்று கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் சிறப்பாக நடைபெற்றது.

வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபாவதி பிரதம விருந்தினராகவும், மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், மாகாண பிரதிச் செயலாளர் இராசநாயகம் ஆகியோரும், 12 வலய கல்விப் பணிப்பாளர்கள், 37 கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர், வட மாகாண பாடசாலைகளின் அதிபர்கள, மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடநூல்கள் சம்பிரதாயபூர்வமாக வழங்கப்பட்டன. (136)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பலநோக்கு கூட்டுறவு சங்க கேட்போர் கூடத்தில் தலைவர் ஏ.எம்.ஜமால் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 2012 இற்கான புதிய செயறகுழு உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் நிகழ்வு இடம பெறுவதுடன் கடந்த ஒரு வருட காலத்தில் சம்மேளனத்தின் நடவடிக்கை சம்பந்தமான விளக்கங்களும் அளிக்கப்படவுள்ளன. (105)



## பரமர் சங்கமம்

எங்கட் இலக்கியக்காரர்களின் ஆட்டோட்டமெல்லாம் இந்த மில்லேனியம் நூற்றாண்டு காலங்களில் ஓய்ந்து கிடப்பதாகவே எனக்குப் படுகிறது.

1960 ஆம் ஆண்டளவில் தோற்றம் பெற்ற இலக்கிய மறுமலர்ச்சி 1980 ஆம் ஆண்டைத் தாண்டியும் வீரியம் பெற்று வளர்ந்து வந்தது.

அதன்பின்பாக தோன்றிய தமிழ்த்தேசிய அலை முப்பது ஆண்டுகள் வரை அதன் போக்கைத் திசை திருப்பிப் புதிய தடத்தில் இலக்கியப் போக்கை அடித்துச் சென்றதனால் 2009 ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பிற்பாடு அந்த ஆரவாரங்கள் ஓய்ந்து போயின.

இப்பொழுதெல்லாம் அவசர அவசரமாகப் பத்திரிகைகளின் பக்கங்களை நிரப்ப ஆக்கப்படுகின்ற படைப்புகள் அதே வேகத்தில் நூலுருப் பெற்று வருவதால், நூல்கள் வெளியிடப்படுகின்ற விழாக்கள் அபரிமிதமாக நடைபெற்று வருவதையே காணவும் முடிகிறது.

இவை காலத்துக்கு ஏற்றவாறு திடீர் தோசை, அப்பம், புட்டுப்போல சந்தையில் விற்றுப் போகின்றன. அந்தந்த நேரப் பசியை போக்குவதுபோல் வாசிப்புத் தேவையை மட்டும் நிரப்புகின்றன.

மனித சமுதாயத்திற்கு சரியான திக்கைக் காட்டுவது போன்ற இலக்கியக் கொள்கைகளை வலியுறுத்தி வளர்த்துச் செல்லும் பணியில் எத்தகைய அமைப்புகளும் அன்றுபோல் இன்று இல்லை.

பேராசிரியர் கைலாசபதி அவரைத் தொடர்ந்து பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இட்டுச் சென்ற பாங்கில் இன்றந்த இலக்கிய முன்னோடிகளும் இல்லாத நிலை இருந்து வருகிறது.

திட்டவட்டமாக எந்த இலக்கியக் கொள்கையையும் துணிந்து முன் வைக்கத் திராணி அற்றவர்களாக எமது இலக்கியக்காரர்கள் திரிசங்கு சொர்க்கத்தில் காணப்படுகின்றனர்.

இதனால் எதைச் சொல்வது எதை விடுவது என்ற பொது நோக்கில்லாமல் அவசரப் படைப்புகளாக பத்திரிகை, சஞ்சிகைகளில் இளைஞர், யுவதிகளால் படைக்கப்பட்ட உப்புச் சப்பற்ற படைப்புகள் நூல்களாக வருகின்றன.

இதனால் 60 களில் கட்டி வளர்க்கப்பட்ட நல்லிலக்கிய நோக்குகள் இல்லாமல் எமது எதிர்காலச் சந்ததிகள் சீரழிவுக்கு உள்ளாகி வருவதைக் காண்கிறோம்.

அவர்களுக்கு இப்பொழுது நுகரக் கிடைப்பதெல்லாம் நச்சு இலக்கியங்களாகத்தான் உள்ளது.

பல்கலைக்கழகங்கள், புத்தி ஜீவிகள் முன்னரை விடவும் எம்மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றனர். ஆயினும் அவர்கள் தமது வாழ்க்கை, பணி என்பவற்றுடன் நிறைவு காண்கின்றனர்.

கட்டி எழுப்பப்பட்ட இலக்கியப் பாதையைப் புதிதாகத் தூசி தட்டி திரும்பவும் பழமையில் இருந்து புதிய பாதையைத் திறக்க எஞ்சியுள்ள இலக்கியக்காரர்கள், அபிமானிகள், ஆதரளவாளர்கள், பேராசிரியர்கள், புத்தி ஜீவிகள் முன்வருவார்களா?

பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற சிந்தனைதான் இப்ப பரமருக்குப் பாருங்கோ!



## இராசி பலன் 2012

### கும்ப ராசி




அவிட்டம் 3,4 பாதங்கள், சதயம், பூரட்டாதி, 1,2,3 பாதங்கள் வரை பெயர் முதல் எழுத்துக்கள் :- கு, க, கோ, ஸ, ஸி, ஸூ, ஸே, ஸோ, த

நீங்கள் வலிமை பொருந்திய தேக அமைப்பும், கூர்மையான பார்வையும், உயரமான உருவமும் கொண்டு பார்வைக்கு எளிமையான தோற்றம் உடைவர்கள். தோற்றத்திற்கும், வயதிக்கும் சற்றும் பொருத்தமே இருக்காது. யாரையும் பார்த்த மாத்திரத்தில் அறியக்கூடிய மனப்பக்குவம் கொண்டவர்கள். எதையும் சுலபத்தில் யூகித்தறியும் ஆற்றலைக் கொண்டவர்கள். நினைத்தவை யாவும் சாதிக்கும் வல்லமையைப் பெற்றவர்கள். குடும்பத்தின் மீது அதிக அளவு பற்றும், பாசமும் உடையவர்கள் வெகு சுலபத்தில் பிறரை நம்புவுதால் ஏமாற்றத்தையும் பெறுவார்கள். ஸ்திரமான உறுதியான தொழில் வளம் உடையவர்கள். பிரயாணங்களையும், கேளிக்கைகளையும் விரும்புபவர்கள். இளமையில் கடின உழைப்பும், வறுமையைப் பெற்றாலும் மத்திம வயதில் இருந்து படிப்படியாக முன்னேற்றம் பெற்றுப் புகழ் அடைவார்கள். அதிக ஆசைகளும், திட்டங்களும் இருந்தாலும் சிலவற்றில் முழுமையான வெற்றியைப் பெறுபவர்கள். பிறர் விஷயங்களில் தலையிடுவதில் அதிக நாட்டம் உடையவர்கள். குடும்பப் பொறுப்பு அதிகம் உடையவர்கள். கல்விச் சிப்பு, சொத்து வசதி, வசீகரமான தோற்றம் கொண்ட மனைவி அமையப் பெற்றவர்கள். பெற்றோரை பேணிக் காக்கும் புத்திர பாக்கியம் உடையவர்கள். இப்படிப்பட்ட உங்களுக்கு 2012 புத்தாண்டின் பலன்களைப் பற்றி இனிப் பார்ப்போம்.

சனி, ராகு, உச்ச பலத்துடன் சாதகமாக இருப்பினும், 3,4ஆமிட குருவால் வேலை கிடைக்காதவர்கள் இன்னும் கொஞ்சம் காத்திருக்க வேண்டும். வேண்டாத உறவினர்கள் வருகையும், விருந்துபசாரச் செலவுகளும் தொடர்ந்து இருக்கும். குடும்பத்தில் நடக்க வேண்டிய திருமணம் மற்றும் சுபகாரியங்களைத் தள்ளிப்போடவேண்டாம். எதிலும் எச்சரிக்கையாக நடந்துகொள்ள வேண்டிய காலகட்டமிது. குடும்பத்தில் பணவசதிகள் குறைவதால் பற்றாக்குறைகள் அதிகரித்து கடன்கள் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுத்துவதாக அமையும். பெற்றோர் மூலம் எதிர்ப்பு, இடைஞ்சல் உண்டு. தந்தையால் பிரச்சினை கொள்வதால் விரயங்களைப் பெறக்கூடும். சகோதர வகையினரால் கோபதாபம், விரக்தி, சலிப்பு போட்டிகள் போன்றவை காணப்படும். மனைவியால் வீண் செலவு உண்டு. புத்திர சந்தான வகையில் எதிர்பாராத செலவும் பொறுப்பும் ஏற்க வேண்டியிருக்கும். இருப்பிடத்தில் அண்டை, அயலவர்கள் மூலம் வீண் விரயம். எதிலும் எதிர்ப்பு ஏற்படும்.

24-01-2012 முதல் 14-04-2012 வரை செவ்வாய் வக்கிரமடைவதால் சட்ட திட்டங்கள், அரசாங்கக் கெடுபிடி, வழக்கு விவகார இனங்களில் தொல்லை, செலவு, ஏமாற்றம் ஏற்படலாம். நிதானத்தைக் கடைப்பிடிப்பது உத்தமம்.

15-05-2012 முதல் 27-06-2012 வரை சுக்கிரன் வக்கிரமடைவதால் இக்கால கட்டத்தில் குடும்ப சுகம், பெற்றோர் நலம், பணவசதி, ஆபரண வசதி, வாகன வகை இவைகளில் தொல்லை செலவு அதிருப்தி தோன்றக்கூடும்.

16-05-2012 முதல் 27-06-2012 வரை சனி பகவான் தமது வக்கிர சஞ்சாரத்தில் மறுபடி கன்னியில் இடம்பெறுகிறார். இதுகாலம் மறுபடி அஷ்டம் சனி என்பதால் கடன், வழக்கு, வைத்தியம் இவைகளை இக்கால கட்டத்தில் தவிர்க்க நல்லது. பிரயாணங்கள், முதலீடுகளைத் தவிர்ப்பது ஏற்றதாகும்.

தொழில் வகைகளில் இருந்து வந்த சிரமங்கள் படிப்படியாகக் குறைந்து அடுத்தடுத்து முன்னேற்றமான பலன்களாக நடைபெறும். அரசாங்க உதவிகளைப் பெற பலமுறை முயற்சி செய்தால் கிடைத்துவிடும். புதிய நூதனமான முயற்சிகள் பல செய்ய அதற்காக கடுமையாக உழைத்து அதிலும் வெற்றி காண்பீர்கள். அதிகாரிகளிடம் இருந்து சிற்சில உதவிகள் கிடைக்கப்பெறுவீர்கள். 17-05-2012இல் ஏற்பட இருக்கும் குருப்பெயர்ச்சி தொடர்ந்து சாதகமாக இல்லை என்பதால் நிதானித்தும், அனுசரித்து செல்வது உத்தமம். மொத்தத்தில் இது ஒரு சாதாரண வருடமாகும்.

#### பெண்களுக்கு

உங்களுக்கு நல்ல பலன்களாக நடந்து வரும். திருமணம் மற்றும் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான திட்டம் தீட்டி நாள் குறித்து வைக்கலாம். உறவினர்களால் கொஞ்சம் செலவுகளும் சிற்சில ஆதாயங்களும் கிடைக்கப்பெறுவீர்கள். கணவன், மனைவி உறவு வகையில் அன்பும், அனுசரணையும் அதிகமாகவே இருக்கும் பெற்றோர் வகையில் சுமாரான ஆதரவு கிடைத்துவரும். உடன் பிறந்தவர்கள் உதவிகரமாகச் செயற்படுவார்கள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்களால் அளவான ஆதரவு கிடைத்துவரும். பொன், பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்புண்டு. இவ்வாண்டு குருபலம் இல்லாத வருடமாக இருப்பதால் சுபகாரியம் கருதி பரிகாரங்கள் செய்து பலன் பெறலாம்.

#### உத்தியோகஸ்தர்களுக்கு

கடமைகளை அக்கறையுடன் செயலாற்ற வேண்டும். மேலதிகாரிகளின் கோபதாபங்களுக்கு ஆளாகாமல் நடந்துகொள்ள வேண்டும். முன்னேற்றத்தைக் கருதி அகலக் கால் வைக்கக்கூடாது. இடமாற்றங்களை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். சக உத்தியோகஸ்தர்களிடம் விழிப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும்.

#### வியாபாரிகளுக்கு

இருக்கும் வியாபாரத்தை நல்லபடியாக தக்கவைத்துக் கொள்வதே இப்போது நீங்கள் செய்ய வேண்டிய வேலை. கொடுக்கல், வாங்கல் இனங்கள் சரியானபடி கை கொடுக்காததால் பணப் பற்றாக்குறை காரணமாக பிரச்சினைகள் வரும் என்பதால் முன் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வது நல்லது. வாடிக்கையாளர் களிடம் பக்குவமாக நடந்து கொள்ள வேண்டும்.

#### தொழிலாளர்களுக்கு

முதலாளி வர்க்கத்தாரிடம் அவர்களுடைய கட்டுப்பாடுகளுக்கு, இப்போது நீங்கள் அனுசரித்துதான் போக வேண்டும். வீண் பிடிவாதங்களையும் தேவையற்ற கோரிக்கைகளையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். மிக்க அவசிம் என்றால் மட்டுமே யூனியன் சொல்லும் போராட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும். மற்றபடி எல்லாம் நலமே.


#### விவசாயிகளுக்கு

விவசாயத்தில் பெரிய மகசூலைக் குவித்து அதிக இலாபத்தை அடைய முடியாதுவிட்டாலும் உழைப்புக்கேற்ற ஊதியம் என்றபடியான வருவாய் கிடைக்கும். ஒரு முறைக்கு பலமுறை முயற்சி எடுத்தால் அரசாங்க உதவிகளைப் பெறலாம்.

#### மாணவர்களுக்கு

இப்போது நீங்கள் உஷாராகச் செயற்பட வேண்டிய காலமிது. மிக முயற்சி எடுத்து கவனமாகப் படித்தால் மட்டுமே தேர்வில் கொஞ்சமாவது தேறலாம். கேளிக்கை உல்லாசங்களில் நேரத்தையும் மனதையும் இப்போது செலவிட வேண்டாம்.

# தேசிய ரீதியில் எமது பாடசாலை அறியப்பட்டிருப்பதில் மகிழ்ச்சி!



(யாழ்ப்பாணம்)

தேசிய மட்டப் போட்டிகளில் சாதித்து பாடசாலையில் பெயரை தேசிய மட்டத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் அந்த வகையில எமது பாடசாலை தேசிய மட்டத்தில் அறியப்பட்டிருப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். தொடர்ந் தும் சிறப்பான செயற்பாட்டை வெளிப் படுத்தி எமது பாடசாலைக்கும், மாவட்டத்திற்கும் பெருமை சேர்ப்பதே எனது நோக்கமாகும்.

.இவ்வாறு தேசிய மட்ட கோலூன்றிப்பாய்தலில் வெள்ளிப்பதக்கம் பெற்ற குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலய மாணவன் அன்ரனிநேச ராசா அன்ரனிபிரசாத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தந்தை இல்லாத நான் தாயின் அரவணைப்பில் வளர்ந்தேன். நான் விளையாட்டுத் துறையில் சாதிக்க வேண்டும் என உற்சாகமாக என்னைப் பயிற்சிக்கு அனுப்பி வைத்தார். நான் தேசியமட்டத்திற்கு தயாராகிய போதிலும் மறுபுறம் கா.பொ.த சாதாரண பரீட்சைக்கு சிறந்த பெறுபேற்றினை பெறுவதற்கும் முயற்சி எடுத்துக் கொண்டிருந்தேன்.

கோலூன்றி பாய்தலுக் கான உபகரணங்கள் எனது பாடசாலையில் காணப்படாதபோதிலும் எனது முயற்சியினால் மூங்கில் தடிகளையும் உமியையும் பயன் படுத்தி எனது பயிற்சியை தொடர்ந்தேன்.எனது பாடசாலை அதிபர் ஏ.ஆர். ஜெயநாயகி கல்வியிலும் விளையாட்டிலும் எனக்கு ஊக்கம் அளித்தார்.அத்துடன் எனது உடற்கல்வி ஆசிரியரான துசியந்தன் அவர்கள் எனக்குத் தேவையான பயிற்சியை வழங்கியதோடு எனது அடைவு மட்டத்தை அதிகரிக்கும் நோக்கோடு யா/மகாஜனக்கல்லூரியின் அதிபர், உடற்கல்வி ஆசிரியர்களின் ஒத்துழைப்போடு பயிற்சி பெற்று வந்தேன். மேலதிக பயிற்சிக்காக துரையப்பா விளையாட்டரங்கில் மெய்வல்லுனர் பயிற்றுனரான செ.ரமணனிடம் பயிற்சி பெற்று அடைவு மட்டத்தை மேலும் அதிகரித்து தேசியமட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தினைப் பெற்றுக்கொண்டேன்.

நான் தேசியமட்டத்தில் 17 வயதுப்பிரிவில் 3.65 மீற்றர் உயரத்தை பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்ற போதிலும் எமது பாடசாலையில் கோலூன்றிப் பாய்தல் உபகரணங்கள் இன்மையால் என் போன்ற பல வீரர்கள் தேசிய மட்டத்தில் சாதிக்கமுடியாதுள்ளது.

எனவே எமது பாட சாலைக்கு சம்பந்தப்பட்ட அதி காரிகள் கோலூன்றிப்பாய்தல் உபகரணங்களை தந்துதவினால் எமது பாடசாலை தேசியமட்டத்தில் பல சாதனைகளைப் புரியும் என நம்புகிறேன்.அத்தோடு எமது பாடசாலை முதன்முதலாக பதக்கம் பெற்றதும் குறிப்பிடத்தக்கது. எனவே இனிவரும் காலங்களிலும் சாதனை புரிவதே எனது இலக்காகும் எனத் தெரிவித்தார். (93)

# வடமராட்சி மட்ட கால்பந்தாட்டம் நெடியகாடு இளைஞர் மூன்றாமிடம்

(நெல்லியடி)

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய கால்பந்துப் போட்டியில் நெடியகாடு இளைஞர் அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

வடமராட்சி கால்பந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வடமராட்சிப் பிரதேச அணிகளுக்கிடையிலான கால்பந்துப் போட்டியின் மூன்றாமிடத்திற்கான போட்டி கடந்த நான்காம் திகதி கொலின்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் வதிரி டயமன்ஸ் அணியை எதிர்த்து நெடுடியகாடு இளைஞர் அணி மோதியது.

ஆட்டம் தொடங்கியதிலிருந்தே நெடியகாடு இளைஞர் அணியின் ஆதிக்கம் இருந்து வந்தது. மிகச் சிறப்பான முறையில் ஆடிய நெடியகாடு இளைஞர் அணி டயமன்ஸ் அணியின் கோல் போடும் பல முயற்சிகளை முறியடித்தனர். இதற்கு நெடியகாடு இளைஞர் அணியின் பின்வரிசை வீரர்களின் சிறப்பான தடுப்பு ஆட்டமே காரணமானது.

இறுதியில் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்ற நெடியகாடு இளைஞர் அணி மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

இதேவேளை, இத்தொடரின் இறுதிப் போட்டியில் சென் சேவியர் அணியை 1-0 என்ற கோல் கணக்கில் கலைமதி அணி வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (12)

# செல்வரட்ணம் நினைவு கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

ஏ.ஜே.சி. செல்வரட்ணம் நினைவாக சென் ஜோன்ஸ் கல்லூரியீனால் நடத்தப்படவுள்ள இரண்டு நாள் இனிங்ஸ் போட்டி ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டி சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. இப்போட்டியில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கல்கிசை சென் தோமஸ் கல்லூரி அணி மோதவுள்ளது.



ரூபவாஹினி அனுசரணையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வடமாகண அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில் சம்பியன் பட்டம் வென்ற யாழ். மாவட்ட பெண்கள் அணியினர் விருந்தினர்கள் மற்றும் பயிற்றுநருடன் நிற்பதைக் காணலாம். இப்போட்டி கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# கடின பயணம்



(கொழும்பு)

இலங்கை அணி நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் தென்னாபிரிக்காவுக்கு பயணமானது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட் போட்டிகள், 5 ஒரு நாள் போட்டிகள், ஒரு ருவென்ரி 20 போட்டித் தொடர்களில் பங்கேற்கவுள்ளது. டெஸ்ட் தொடர் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆஸி. மண்ணில் இந்தியா சாதிக்கும்

(மும்பை)

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்த முறை இந்திய அணி கைப்பற்றும் என அவ்வணியின் முன்னாள் அதிரடி வீரர் ஆடம் கில்கிறிஸ்ட் தெரிவித்தார்.

அவுஸ்ரேலிய அணி பின்னடைவைச் சந்தித்து மீண்டும் முன்னேற ஆரம்பித்துள்ளது. இந்த நேரத்தில் இந்திய அணி, அவுஸ்ரேலியாவை வீழ்த்தி அவுஸ்ரேலிய மண்ணில் டெஸ்ட் தொடரைக் கைப்பற்றுவதற்கு நல்ல வாய்ப்புள்ளது.

கடைசியாக அவுஸ்ரேலியாவுக்கு எதிராக விளையாடிய சில போட்டிகளில் இந்திய அணி சிறப்பாகவே விளையாடியுள்ளது. அதுபற்றி அவுஸ்ரேலியாவுக்கும் தெரியும். அவுஸ்ரேலியா மீண்டும் முதலிடத்தைப் பிடிக்க இந்தியாவுக்கு எதிரான இந்த டெஸ்ட் தொடரில் சிறப்பாக விளையாடி வெற்றிபெற வேண்டும்.



கடைசி இரண்டு அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்தில் இந்தியத்துடுப்பாட்ட வீரர்கள் ஆதிக்கம் செலுத்தினர். இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் குறிப்பாக அவுஸ்ரேலிய சூழலுக்கு ஏற்றவாறு பொருந்தி விடுகின்றனர். 1999-2000ஆம் ஆண்டு எங்கள் நாட்டில் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் முதல் முறையாக நான் விளையாடினேன். அப்போது அந்த சூழல் இந்திய வீரர்களுக்கு மிகக் கடினமாக இருந்தது. மைதானத்தில் ஏராளமான புற்கள் இருந்ததால், பந்துகள் எகிறின. பொதுவாகப் பார்த்தால் அவுஸ்ரேலிய ஆடுகளங்கள் பழக்கப்பட்டதுதான். இந்திய அணியில் உலகத்தரம் வாய்ந்த வீரர்கள் உள்ளனர். அவர்கள் இங்கு சதமடிப்பார்கள். இங்கு விரைவாக ஓட்டம் குவிக்க முடியாது என்று சொல்ல மாட்டேன். விரைவாக ஓட்டம் குவிக்க முடியும் என்றும் சொல்ல முடியாது என்றார்.

# மீண்டும் பதான்



(புதுடில்லி)

மூன்று வருட இடைவெளியின் பின்னர் இர்பான் பதான் மீண்டும் இந்திய அணியில் இடம்பிடித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான கடைசி இரண்டு ஒருநாள் போட்டியில் விளையாடும் இந்திய அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இந்திய அணியில் ஒரே ஒரு மாற்றம் செய்யப்பட்டது. உமேஷ்யாதவ் முன்னதாக அவுஸ்ரேலியா செல்வதால் அணியில் இடம் பெறவில்லை. அவருக்கு பதிலாக இர்பான்பதானுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

இர்பான்பதான் சர்வதேசப் போட்டிகளில் விளையாடி கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் ஆகிறது. கடைசியாக 2009ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடந்த 20 ஓவர் போட்டியில் விளையாடினார்.

இது குறித்து இர்பான் பதான் கூறியதாவது:- இந்திய அணியில் மீண்டும் இடம் கிடைத்தது மிகுந்த மகிழ்ச்சி தருகிறது. எனக்குக் கிடைத்த இந்த வாய்ப்பை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வேன். இந்திய அணிக்காக விளையாடுவது எப்போதுமே கனவானது. எனக்கு அந்தக் கனவு இப்போதே நனவாகி விட்டது. இதைவிட வாழ்க்கையில் சிறந்தது எதுவும் இல்லை. இந்திய அணியில் மீண்டும் இடம் பெற கடினமாக உழைத்தேன். அதற்குப் பலன் கிடைத்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

இதேவேளை, ஆனால் அவுஸ்ரேலிய பயணத்துக்கான அணியில் இர்பான் பதானுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. விலா எலும்பு முறிந்த பிரவீண்குமாருக்கு பதிலாக அபிமன்யூமிதுன் சேர்க்கப்பட்டுள்ளார்.

# மோசமான துடுப்பாட்டமே தோல்வியடையக் காரணம்



(அகமதாபாத்)

முன்னணித் துடுப்பாட்ட வீரர்களின் மோசமான துடுப்பாட்டமே தோல்விக்குக் காரணம் என்று இந்திய அணிக் கப்டன் சேவாக் தெரிவித்துள்ளார்.

இந்த ஆடுகளத்தில் 261 ஓட்ட இலக்கு என்பது எடுக்கக் கூடியது தான். கடந்த 3 ஆட்டத்திலுமே ரோகித்சர்மா, வீராட் கோலியைத் தவிர முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் எவருமே சரியாக விளையாடவில்லை. முதல் நிலை துடுப்பாட்ட வீரர்களில் ஒருவர் 30 முதல் 40ஆவது ஓவர்கள் வரை நிலைத்து நின்றிருந்தால் ஓட்டங்களைக் குவித்திருக்க முடியும். இந்திய அணியின் தொடக்கம் இதுவரை சிறப்பாக அமையவில்லை.

இனி வரும் ஆட்டங்களிலாவது அந்த நிலைமை மாறும் என்று நம்புகிறேன். ரோகித் சர்மாவின் ஆட்டம் மீண்டும் அபாரமாக இருந்தது. 95 ஓட்டத்துடன் அவர் ரன்அவுட் ஆனது துரதிருஷ்டமே. அவரது ரன்அவுட் ஆட்டத்தின் போக்கை மாற்றி விட்டது. கடைசி 5 ஓவர்களில் 73 ஓட்டங்களை விட்டுக் கொடுத்ததும். மோசமானதாகும். பந்து வீச்சாளர்கள் யோர்க்கர் வீச தவறிவிட்டனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# அடுத்து வரும் போட்டிகளிலும் சிறப்பான ஆட்டம் தொடரும்

(அகமதாபாத்)



வீரர்களின் கூட்டு முயற்சியின் மூலமே அகமதாபாத்தில் இந்திய அணியை வெல்ல முடிந்தது. அடுத்து வரும் போட்டிகளிலும் இதே முயற்சியை வெளிப்படுத்தி வெற்றிக்காக இறுதி வரை போராடுவோம் என்று மேற்கிந்தியத்தீவு அணியின் கப்டன் டரன் சமி தெரிவித்தார்.

நாங்கள் மிகவும் கடுமையாகப் போராடி இந்த வெற்றியை பெற்றோம். எங்களது துடுப்பாட்டம் சிறப்பாக இருந்தது. ராம்போல், சாமுவேல்ஸ் ஆகியோரது பந்துவீச்சு அபாரமாக இருந்தது. புதுமுக வீரர் நரீனும் நன்றாக வீசினார்.

வீரர்களின் கூட்டு முயற்சியால் வெற்றி கிடைத்தது. 260 ஓட்டம் என்பது எதிரணிக்கு நல்ல வெற்றியிலக்குத்தான். ஆனால் ரோகித்சர்மா நன்றாக போராடினார். ராம்போல் தொடக்கத்திலேயே விக்கெட் கைப்பற்றியது அபாரமானது. இப்போட்டி ஆரம்பமாவதற்கு முன்னரே எமது பயிற்றுநர் மிகுந்த நம்பிக்கையோடு சொன்னார். இப்போட்டியில் நிச்சயம் எங்களால் வெல்ல முடியும் என்று. அவர் கூறியது போன்று நாம் வென்று சாதித்திருப்பதில் மகிழ்ச்சி எனவும் அவர் தெரிவித்தார்.

# இலங்கையை வென்றது ஆப்கான்

(புதுடில்லி)

தெற்காசிய கால்பந்து சம்பியன்ஷிப் போட்டியில் ஆப்கானிஸ்தானுடனான ஆட்டத்தில் இலங்கை அணி 1-3 என்ற கோல் கணக்கில் தோல்வி அடைந்தது.

இதன் மூலம் ஆப்கான் அணி லீக் சுற்றின் 'ஏ' பிரிவில் இரண்டு போட்டிகளில் 4 புள்ளிகளைப் பெற்று முன்னேறியது. ஆப்கான் இந்தியாவுடனான தனது முதல் போட்டியை 1-1 என்ற கணக்கில் சமன் செய்து ஒரு புள்ளியைப் பெற்றது.

மறுபுறத்தில் இலங்கை அணி புள்ளிப் பட்டியலில் 3 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்துக்கு சரிந்தது.

டில்லி ஜவகர்லால் நேரு அரங்கில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் மொஹம்மட் செயின் இலங்கை அணிக்கு சிறந்த ஆரம்பத்தைப் பெற்றுக்கொடுத்தார். போட்டியின் 17 ஆவது நிமிடத்தில் கோலடித்த அவர் இலங்கையை 1-0 என முன்னிலை பெறச் செய்தார்.

எனினும் சிறப்பாக ஆடிய ஆப்கான் வீரர்கள் முதல் பாதியில் இலங்கைக்குத் தொடர்ச்சியான நெருக்கடியைக் கொடுத்தனர். ஆப்கான் வீரர் சன்ஜர் அஹமட் 22, 36 ஆவது நிமிடங்களில் தொடர்ச்சியான கோல்களைப் போட்டு முதல் பாதியில் அந்த அணியை 2-1 என்ற கணக்கில் முன்னிலை பெறச்செய்தார்.

தொடர்ந்து இரண்டாவது பாதியிலும் ஆப்கான் வீரர்களே ஆதிக்கம் செலுத்தினர். போட்டியில் 79 ஆவது நிமிடத்தில் அதா எம். யம்ராலி ஆப்கான் சார்பில் மூன்றாவது கோலைப் போட்டார். இறுதியில் 3-1 என்ற கோல் கணக்கில் ஆப்கானிஸ்தான் அணி வென்றது.

# 2ஆவது டெஸ்டில் டானியல் அறிமுகம்


(சிட்னி)

நியூசிலாந்து அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் சகலதுறை வீரர் டானியல் கிறிஸ்டியன் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலியா - நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஹோபர்ட்டில் எதிர்வரும் 9ஆம் திகதி தொடங்குகிறது. இந்த போட்டிக்கான அவுஸ்ரேலிய அணியில் தெற்கு அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த சகலதுறை வீரர் டானியல் கிறிஸ்டியன் புதுமுக வீரராக சேர்க்கப்பட்டுள்ளார்.

காயம் அடைந்த வேகப்பந்து வீச்சாளர் பென் கட்டிங் அணியில் இருந்து விலகியதால் அவருக்குப் பதிலாக டானியல் கிறிஸ்டியன் சேர்க்கப்பட்டுள்ளார். வாய்ப்பை சரிவரப் பயன்படுத்துவேன் என டனியல் தெரிவித்துள்ளார்.

# அவுஸ்ரேலியாவில் சாதிப்பேன்



(புதுடில்லி)

மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான டெஸ்ட் தொடரில் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தி இந்திய அணியின் வெற்றிக் காரணமாக இருந்தது போல அவுஸ்ரேலிய அணிக்திரான தொடரிலும் அணியின் வெற்றிக்குப் பக்கபலமாக எனது பந்து வீச்சு அமையும் என இந்திய அணி யின் சுழற்பந்து வீச்சாளர் ஓஜா தெரி வித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரில், இந்திய அணியின் வெற்றிக்கு எனது பங்களிப்பும் ஒரு காரணமாக இருந்தது மகிழ்ச்சி அளிக்கிறது.

இத்தொடரை மிகவும் முக்கியமானதாகக் கருதினேன். ஏனெனில் ஒரு ஆண்டுக்குப் பின் டெஸ்ட் போட்டியில் விளையாடும் வாய்ப்புப் கிடைத்ததால், திறமையை நிரூபித்தால் மட்டுமே அணியில் நிரந்தர இடம் பிடிக்க முடியும் என்ற இக்கட்டான நிலையில் இருந்தேன்.

தற்போது எனது கவனம் முழுவதும் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் மீது உள்ளது. அவுஸ்ரேலிய அணியை, அதன் சொந்த மண்ணில் வீழ்த்து வது எளிதான காரியமல்ல.

இருப்பினும் முழுத் திறமையை வெளிப்படுத் தும் பட்சத்தில், அவுஸ்ரேலிய மண்ணில் சாதிக்கலாம்.

அவுஸ்ரேலிய மண்ணில் முதன் முறையாக டெஸ்ட் போட்டியில் விளையாடுவது குறித்து எவ்வித பிரச்சினையும் இல்லை. எங்கு விளையாடுகிறோம் என்பது முக்கியமல்ல, நூறு சதவீத ஆட்டத்தை வெளிப்படுத்தினால் போதுமானது எனவும் அவர் தெரிவித்தார்.



டேவிஸ் கிண்ண ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டியில், ஆர்ஜென்டினாவை வீழ்த்திய ஸ்பெயின் அணி சம்பியன் பட்டம் வென்றது. ஸ்பெயினில் உள்ள செவில்லி நகரில் இப்போட்டி நடைபெற்றது. இதில் ஸ்பெயின், ஆர்ஜென்டினா அணிகள் மோதின. இரண்டு ஒற்றையர் மற்றும் ஒரு இரட்டையர் போட்டியின் முடிவில் ஸ்பெயின் அணி 2-1 என முன்னிலை வகித்தது. இதன் மூலம் ஸ்பெயின் அணி ஐந்தாவது முறையாக தொடரைக் கைப்பற்றியுள்ளது. 2000, 2004, 2008-09, 2011 ஆண்டுகளில் ஸ்பெயின் கிண்ணத்தை வென்றது.



# கட்சித் தலைவர் தெரிவுக்கு புதுத்திட்டம்

(கொழும்பு)


ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரைத் தெரிவுசெய்யும் செயற்குழுக்கூட்டத்தில் கட்சித்தலைவருக்கான தெரிவு இரகசிய வாக்கெடுப்பின் மூலம் மேற்கொள்ளப்படவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரியுள்ளார்.

திறந்த நிலை வாக்கெடுப்பு ஒன்று இடம்பெற்றால் அங்கத்தவர்கள் தமது உண்மை நிலைப்பாட்டைத் தெரிவிக்க அச்சம் கொள்வர். எனவே வாக்கெடுப்பு இரகசியமாக இடம்பெறவேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். மேலும், ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுவல் வெற்றிடமாக உள்ள இடங்கள் எதிர் வரும் வாரம் நிரப்பப்படும் என்று கட்சியின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் செயற்குழுவில் 9 உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் 11 தொழிற்சங்க உறுப்பினர்கள் ஆகிய வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியுள்ளன. எனினும் கடந்த மாதங்களில் தேர்தல்கள் இடம்பெற்றமை காரணமாக அவற்றை நிரப்பமுடியவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# 100 உள்ளூராட்சி மன்றங்களை அபிவிருத்தி செய்யத் திட்டம்

(கொழும்பு)



உள்ளூராட்சி மன்றங்களை அபிவிருத்தி செய்வதற்கான புதிய திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு 100 உள்ளூராட்சி மன்றங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் இந்திக்க பண்டாரநாயக்க குறிப்பிட்டார்.

இதன் ஊடாக ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திற்கும் 50 மில்லியன் ரூபா வீதம் நிதி ஒதுக்குவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இந்தத் திட்டத்தின் ஊடாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் வருமான அதிகரிப்புக்கான ஆரம்பக் கட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. இந்தச் செயற்திட்டத்திற்கு இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக 70 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# அரச, தனியார்களிடம் இருந்து 1689 மில்லியன் அறவிட வேண்டும்

(கொழும்பு)

அரச, தனியார் மற்றும் வீட்டுப் பாவனைக்காக மின்சாரம் விநியோகிக்கப்பட்டமைக்காக கடந்த செப்ரெம்பர் மாதமளவில் 1689 மில்லியன் ரூபா இலங்கை மின்சார சபைக்கு கிடைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

அறிக்கையொன்றை விடுத்துள்ள இலங்கை மின்சார சபை, குறித்த தொகையில் 5 சதவீதம் நேரடியாக அரச நிறுவனங்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 40 சதவீதமான தொகை வீதிவிளக்குகளுக்கான செலவினமாக அரச நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது நாளாந்த மின்சார தேவையில் 80 சதவீதம் அனல் மின்நிலையங்களில் ஊடாகவே உற்பத்தி செய்யப்படுகிறது. இதனபோது. ஒரு மின்சார அலகுக்காக 20 ரூபா தொடக்கம், 25 ரூபா வரை அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஒரு தேசியப் பாடசாலையும் மலையகத்தில் இல்லை

(கொழும்பு)

நாட்டில் அனைத்து வளங்கள் கொண்ட பாடசாலைகளை கல்வி அமைச்சு ஏற்படுத்தி வரும் நிலையில் மலையகத்தில் ஒரு தேசியப் பாடசாலைகூட இல்லை என நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

எல்லோருக்கும் கல்வி என்ற கொள்கை அரசு கடைபிடித்து வரும் நிலையில் மலையகப் பாடசாலைகள் புறக்கணிக்கப்படுவதாகவும் அதிலிருந்து மீள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் இணைந்து இன்று நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, விவாதத்தில் உரையாற்றிய ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன், மலையக பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவற்றை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

# மாணவர்கள் மூவர் மீது தாக்குதல்

(கொழும்பு)

மூன்று பாடசாலை மாணவர்கள் தனிப்பட்ட பிரச்சினையால் தாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு தாக்கப்பட்டவர்கள் திஸ்ஸமஹாராம தெபரவெவ பிரதேசத்தைச சேர்ந்த பாடசாலை மாணவர்கள் ஆவர். தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பகுதிநேர வகுப்புக்குச் சென்று திரும்பிக் கொண்டிருக்கும் போது அவர்களை வழிமறித்த ஐவர் இந்தத் தாக்குதலை நடத்தியதாக பொலிஸார் கூறினர். இதன் போது காயமடைந்த மாணவர்கள் தெபரவெவ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு ஏனையவர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# தரமான கல்வி வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

**பாடசாலை மாணவர்களுக்கு சுத்தமான குடிநீர் மற்றும் சிறந்த சுகாதாரச் சேவைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.**

யுனிசெவ் மற்றும் நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் இத்திட்டத்தின் ஆரம்பக் கட்டம் ஊவா, மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள 250 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இந்தச் செயற்றிட்டத்திற்காக 330 மில்லியன் கிடைத்துள்ளது.

இதன்படி பாடசாலையொன்றுக்கு குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்த 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் நிறைவடையும் போது தேவையான அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு பாடசாலையொன்றுக்கு 3 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா நிதி மற்றும் நீர் வழங்கும் கருவிகளும் வழங்கப்படும்.

இதேவேளை, ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளை வளப்படுத்தும் திட்டத்தில் அதனுடன் இணைந்ததாக ஐயாயிரம் சிறுவர் நட்பு பாடசாலைகளை வளப்படுத்தும் வேலைத்திட்டமும் இடம்பெற்று வருகின்றது.

இதன் மூலம் தரமான கல்வியை பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுப்பதுடன் அவர்கள் சவால்களை எதிர்கொண்டு வெற்று பெறும் திறன் பெற்றவர்களாக ஆக்குவதே நோக்கமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# நிதி மோசடியில் பிக்கு கைது

(கொழும்பு)

இரத்தினபுரிப் பிரதேசத்தைச் சேர்ந்த பிக்கு ஒருவர் நிதி மோசடி செய்தாகப் புகார் செய்யப்பட்டது.

இதை அடுத்து அவர் கண்டி பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நிலையில் கைது செய்யப்பட்டார்.

கைதான மேற்படி பிக்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை சட்டத்தரணி மூலம் கண்டி நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் கூறி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பிக்குவை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

# தெற்குக் கடலில் ஒருவரைக் காணவில்லை முன்பு காணாமல் போனவர்கள் மீண்டனர்

(கொழும்பு)

பேருவளையில் இருந்து கடலுக்குச் சென்ற சாம எனும் படகில் இருந்த மீனவர்களில் ஒருவர் காணாமற்போயுள்ளார். குறித்த மீனவர் கடலுக்குள் வீழ்ந்திருக்கலாம் என சந்தேகிப்பதாக அவருடன் படகில் சென்ற ஏனைய மீனவர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். காணாமற்போன மீனவரைக் கண்டுபிடிப்பதற்காக படகில் இருந்த சக மீனவர்கள் மேற்கொண்ட முயற்சி வெற்றியளிக்கவில்லை. காணாமற்போயுள்ள மீனவரைக் கண்டுபிடிப்பதற்காக இராணுவத்தினரின் உதவியைக் கோரியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மிரிஸ்ஸ மீனவர் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்று விபத்துக்குள்ளான "லக்மது -3" என்ற பல்தின மீனவப் படகில் பயணித்த 5 மீனவர்கள் நேற்றுமுன்தினம் கரை திரும்பியுள்ளனர். இந்த பல்தின படகு கடந்த நவம்பர் 8 ஆம் திகதி மீன்பிடி நடவடிக்கைக்காக கடலுக்கு சென்றுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து 400 கடல்மைல் தொலைவில் ஆழ்கடலில் விபத்துக்குள்ளான படகு மிதப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. பின்னர் பேருவளையில் இருந்து சென்ற பிறிதொரு மீனவப் படகு தம்மைப் பாதுகாப்பாக அழைத்து வந்ததாக கரை திரும்பிய மீனவர்களில் ஒருவரான திமுது சஞ்சீவ தெரிவித்தார்.

# சிறையில் இருப்பவரின் பெயரில் கப்பம் கோரல்

(கொழும்பு)

பல்வேறு குற்றச்செயல்களுக்காக பாதாள உலகக்குழு தலைவர்களில் ஒருவரான பொடட நௌபருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தமது பெயரைப் பயன்படுத்தி சில குழுக்கள் கப்பம் கோரல்களில் ஈடுபட்டு வருவதாக பொட்ட நௌபர் பொலிஸ் மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளார். இவர் தற்போது கண்டு போகம்பரை சிறைச்சாலையில் பொட்ட நௌபர் தண்டனை அனுபவித்து வருகின்றார்.

திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த கப்பம் கோரல் சம்பவங்களை முடிவுக்குக் கொண்டு வருமாறும் சந்தேக நபர்களை கைது செய்யுமாறும் பொட்ட நௌபர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனையடுத்து இந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளார்.

# இலங்கைப் பெண் கைது

(கொழும்பு)

டுபாயில் வீட்டுப் பணியாளராக வேலை செய்த இலங்கைப் பெண்ணொருவர் தனது வீட்டு எஜமானியிடமிருந்து 128,000 டினார் பணத்தையும் 3 கையடக்கத் தொலைபேசிகளையும் திருடினார் எனற குற்றச்சாட்டில் டுபாய் குற்றச்செயல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படவுள்ளார். இந்த திருட்டுச் சம்பவம் கடந்த ஒக்டோபர் மாதம் 20ஆம் திகதி நடந்ததாக நீதிமன்றப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதலில் இவர் திருடியதை மறுத்தபோதிலும், பின்னர் பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசிகளை திருடியதை ஒப்புக்கொண்டதாக வீட்டுக்காரர் குறிப்பிட்டுள்ளார். இவர் தனது ஆடைகளுக்குள் மறைத்து வைத்திருந்த 1,520 டினார் பணத்தையும் கைப்பையில் வைத்திருந்த 3,200 டினார் பணத்தையும் பெண் பொலிஸார் கண்டுபிடித்தனர். பொலிஸ் விசாரணையின்போது தான் 28,000 டினார் மட்டுமே திருடியதாக அவர் ஒப்புக்கொண்டதாகக் கூறப்படுகிறது.

# போலித் தங்க வியாபாரிகள் கைது

(கொழும்பு)

போலித் தங்கக் கட்டிகளை விற்பனை செய்துவந்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். போலித் தங்கக் கட்டிகளை விற்பனை செய்த நபர், ஒருவரிடமிருந்து ஒரு இலட்சம் ரூபாவைப் பெற்றுக் கொண்டதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

நீண்டகாலமாக இந்த மோசடி நடவடிக்கையில் அவர்கள் ஈடு பட்டுவந்தமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இவர்கள் இப்பலோகம மற்றும் பியகம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் அவர்களிடமிருந்து மேலும் பல போலித் தங்கக் கட்டிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## பௌதீகவியல்

05. அலைகள் மூலம் சக்தி ஊடுகடத்தப்படுகிறது. ஒலியும் அலைகளாகப் பயணம் செய்கிறது.

1) ஒலி அலைகள் ஊடுகடத்தப்படும் விதத்தைக் கூறுக.

2) ஓய்வில் உள்ள நீர் நிலை ஒன்றினுள் சிறு கல் ஒன்றினை இட்டதும் அலைகள் தோன்றுகின்றன. இந்த அலைகள் ஊடுகடத்தப்படும் விதத்தைக் கூறுக.

3) இழை ஒன்றினைக் கிடையாக ஈர்த்து அதன் அந்தந்த நிலைக்குத்தாக மேல் நோக்கியும் கீழ் நோக்கியும் அசைத்து பிறப்பித்த அலையின் வடிவம் கீழே காட்டப்பட்டுள்ளது. இதன் மீடிறன் 2Hz.


அ) மீடிறன் என்பதால் கருதப்படுவது யாது?
ஆ) இந்த அலையின் நீளம் யாது?
இ) இந்த அலையின் வேகம் யாது?

4) 100 மீற்றர் ஓட்டப்பந்தயம் ஒன்றினை ஆரம்பிப்பதற்கான ஆரம்பிப்புக் கைத்துப்பாக்கியின் மூலம் ஒரு தடவை சுடப்படுகிறது. வெற்றிக் கம்பத்திற்கு அண்மையில் உள்ள நேரம் கவனிப்பவர் வெடிச்சத்தம் கேட்டவுடனேயே நிறுத்தற் கடிகாரத்தை இயக்குகிறார். முதலாவது ஓட்ட வீரர் வெற்றிக் கம்பத்தைக் கடக்கையில் நிறுத்தற் கடிகாரத்தின் வாசிப்பிற்குரிய 12 செக்கனை அவரது ஓட்டத்திற்குச் செலவாகிய நேரமெனக் கவனிப்பவர் குறிப்பிட்டார். இக்கூற்றினை நீர் ஏற்கிறீரா? உமது தீர்மானத்திற்கான காரணம் யாது?


5) கடலில் பயணம் செய்யும் கப்பலில் இருந்து கடலின் அடி வரையிலான ஆழம் எதிரொலி முறை மூலம் அறியப்படுகிறது.

6) அ. எதிரொலி எவ்வாறு தோன்றுகிறது என விளக்குக.
7) ஆ. கப்பலில் இருந்து 20 செக்கனில் மீண்டும் கேட்டது. அந்த இடத்தில் கடலில் ஆழம் எவ்வளவு?
(கடல் நீரின் ஒலியின் வேகம் $1445 ms^{-1}$)


06. படத்தில் வீட்டு மின்சுற்றின் அமைப்புக் காண்பிக்கப்பட்டுள்ளது.




1. இம்மின் சுற்றில் a,b,c, மின்வட்டங்களை இனங்கண்டு எழுதுக.
2. இங்கு d இன் பயன்பாடு யாது?
3. e,f ஆகிய மின்சுற்றுக்களுக்கிடையிலான வேறுபாடுகள் தருக.




4. e எனும் சுற்றில் 50 W கொண்ட இரு மின்குமிழ்களும், மின்சுற்று f இல் 1500 W அமிழ்ப்பு வெப்பமாக்கி ஒன்றும் நாளொன்றுக்கு நிமிடம் வீதம் பயன்படுத்தப்படின் 30 நாட்களைக் கொண்ட மாதம் ஒன்றில் பயன்படுத்தப்பட்ட மின்சக்தியின் பெறுதியைக் காண்க.
5. சுற்று f இல் மின் பொசிவு ஏற்படும் போது அதன் தாக்கத்தில் இருந்து எவ்வாறு பாதுகாக்கக் கூடியதாக உள்ளது?





1. a. இம் மின்சுற்றினூடாகப் பாயும் மின்னோட்டத்தை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் கருவியை இணைக்கும் விதத்தை வரைந்து காட்டுக.
b. இச் சுற்றினூடாகப் பாயக்கூடிய மின்னோட்டத்தைக் கணிக்குக.
c. இவ்விரு மின்குமிழ்களும் ஒளிரும்போது பயன்படுத்தப்படும் வலு யாது?

1. H, f எனும் ஆளிகள் மூடப்படும் போது பெறப்படும் அவதானம் யாது?

2. அம்பியர் மானியைப் பாதுகாப்பிற்காக அம்பியர் மானியுடன் தொடராக இணைக்கப்பட்ட தடையின் அமைப்பை படம் காட்டுகிறது.

1. கறுப்பு - 0
2. நீலம் - 6
3. சிவப்பு - 2
4. வெள்ளி - 10 வீதம்




இத்தடையின் தடைப் பெறுமதி யாது?



## க.பொ.த.சா/தரப் பரீட்சை - 2011


நேரம் - 2 மணி

# கல்வி முரசு

### விஞ்ஞானம் பகுதி - II

**பாழ்.மாவட்டத்திலுள்ள 5 வலயங்களின் ஆசிரிய ஆலோசகர்கள், கற்பித்தல் செயற்பாட்டில் முன்னணியிலுள்ள ஆசிரியர்களால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்**

01. உயிர் வாயு உற்பத்தி கீழே உருவில் காட்டப்பட்டுள்ளது.




1) a. உயிர்வாயு என நாம் குறிப்பிடும் வாயுவின் விஞ்ஞானப் பெயர்.......................................ஆகும்.
b. இவ்வாயுவை உற்பத்தி செய்யும் பக்றீரியா..................................................என அழைக்கப்படும்.
c. இவ்வாயுவின் மூலக் கூற்றுச் சூத்திரம்............................................................ஆகும்

2) a. உயிர் வாயு உற்பத்தி செய்யப்படும் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள் இரண்டு தருக.

.......................................................................................................................

b. உயிர்வாயு உற்பத்தியின் போது பதார்த்தங்கள் சேகரிக்கப்படும் தாங்கி தொடர்ந்து கலக்கப்பட வேண்டும். இதற்குக் காரணம் தருக.

.......................................................................................................................

c. பதார்த்தங்கள் சேகரிக்கப்படும் தாங்கியில் சேர்க்கப்படக் கூடாத பதார்த்தங்கள் 2 தருக.

.......................................................................................................................

3) நீங்கள் உருவாக்கிய உயிர்வாயு உற்பத்தி செய்யப்படும் தொகுதியில் உள்ள குறைபாடு காரணமாக வினைத் திறனுடன் உயிர்வாயு பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

a. இக்குறைபாட்டிற்கான காரணங்கள் இரண்டு தருக.

.......................................................................................................................

b. இக்குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக நீர் பின்பற்றும் செயன்முறைகள் எவை?

.......................................................................................................................

4) உயிர்வாயு உற்பத்தியின் மூலம் வீட்டிற்குக் கிடைக்கும் பிரதான அனுகூலங்கள் 2 தருக.

.......................................................................................................................

5) உயிர்வாயு தகனத்தைக் காட்டும் இரசாயனச் சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது. இடைவெளியை நிரப்புக.

a. $\dots\dots\dots_{(g)} + 2O_{2(g)} \longrightarrow CO_{2(g)} + \dots\dots\dots_{(l)}$

b. வீட்டில் பயன்படுத்தப்படும் LP வாயு அடுப்புக்கு உயிர்வாயு இணைப்பு வழங்கப்பட்டது. எனினும் இதிலே மஞ்சள் நிற சுவாலையே கிடைத்தது. இதற்கான காரணத்தைக் கண்டறிக.

6) உயிர்வாயுத் தகனத்திற்குப் பொருத்தமான,


i. எரிபற்று நிலை எனப்படுவது யாது?

..........................................................................................

ii. விறகு எரிபொருளை விட வாயு எரிபொருள் திறன் மிக்கது. இதற்குக் காரணம் யாது?

..........................................................................................

02. அ) படத்தில் மனிதனின் இதயத்தின் அமைப்புக் காட்டப்பட்டுள்ளது.




i. இதயத் துடிப்பு என்றால் என்ன?

..........................................................................

ii.இதயத் துடிப்பின் அவசியத்தை எழுதுக.

..........................................................................

b.

1. தடிப்பான சுவரைக் கொண்ட அறை (................)
2. ஒட்சிசனை அதிகமாகக் கொண்டு செல்லும் குருதிக்கலன் (................)
3. முழு உடலிலிருந்தும் குருதி வந்து சேரும் அறை (................)
4. கூடிய அமுக்கத்துடன் குருதி பயணிக்கும் கலன் (................)
5. இடது இதய அறையில் அரைமதி வால்வு திறக்குமிடம் (................)

c.

i. இதயத் தசைக்கு ஒட்சிசன் நிறைந்த குருதியைக் கொண்டு செல்லும் நாடி எது?

..........................................................................................

ii. சாதாரணமாக நெஞ்சுவலி எனச் சொல்லப்படும் நோய் எது?

..........................................................................................

iii. இந்நோய் ஏற்படுவதற்கான காரணம் யாது?

..........................................................................................

iv. இந்நோய் ஏற்படுவதற்கான காரணங்களில் ஒன்றான தவறான சுகாதாரப் பழக்கத்தைத் தருக.

..........................................................................................

d.

i. படத்தில் இரண்டு வெவ்வேறு குருதிக் குழாய்களின் குறுக்கு வெட்டுத் தரப்பட்டுள்ளன. அவற்றின் பெயர்களை எழுதுக.

A..............................................

B..............................................




ii. பெரிய படத்திற்கான காரணங்களை விபரிக்க.


..........................................................................................

e. i. நெறிக்கட்டு என்றால் என்ன?..........................................................................

ii. பெரிய படத்திற்கான காரணங்களை விபரிக்க..........................................................................

அ) மாணவனொருவன் தாவர இளைய வகைகளைப் பின்வருமாறு வரிப்படத்தில் தொடுத்துள்ளான்.

f. அட்டவணையைப் பூரணப்படுத்துக.









03)


## உயிரியல்

A. கீழ் தரப்பட்டுள்ள அமைப்பின் மூலம் மாணவன் ஒருவன் உணவுச் சங்கில ஒன்றினூடாக சக்தி ஊடு கடத்தப்படுவதை விளக்குதற்கு முயற்சி செய்தான்.





1) மேற்படி செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்ட சக்தி முதல் எது?
2) உற்பத்தியாக்கியால் மேற்கொள்ளப்படும் சக்தி மாற்றத்தைத் தருக.
3) X எனும் விளைவை இனங்கண்டு எழுதுக.
4) X இல் சக்தி எவ்வடிவில் காணப்படும்?
5) விளைவு X இற்காக உற்பத்தியாக்கியில் இருந்து பயன்படுத்தப்பட்ட சக்தியின் பெறுமதி யாது?

B. நைதரசன் வட்டத்துடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள் அடங்கிய ஒழுங்கமைப்பைப் படம் காட்டுகிறது.





1) a எனும் உயிரங்கியை இனங்காண்க.
2) b எனும் உயிரங்கியை இனங்காண்க.
3) e இல் காணப்படும் நைதரசன் கொண்ட சேர்வைகள் 2 தருக.
4) c எனும் செயற்பாட்டைக் குறிப்பிடுக.
5) d எனும் செயற்பாட்டைக் குறிப்பிடுக.

04. A. மனிதக் கழிவங்கம் ஒன்றின் பகுதியாகிய சிறுநீரகத்தியின் பரும்படி வரிப்படம் இங்கே காட்டப்பட்டுள்ளது.




1. A, B, C, D ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.
2. குருதியில் காணப்படுகின்ற எந்த இரு கூறுகள் கலன் கோளவடி திரவத்தில் காணப்படாது?
3. சிறுநீரகங்களின் கழிவகற்றல் தொழில் தவிர்ந்த வேறு இரு தொழில்களைத் தருக.
4. மேற்படி அமைப்பில் மீள் உறிஞ்சல் நடைபெறும் பகுதியைப் பெயரிடு.
5. பதார்த்தங்களை வடிகட்டுவதற்கு பகுதி A, B கொண்டுள்ள கட்டமைப்புச் சார்ந்த இசைவாக்கங்கள் 2 தருக.
6. நீரிழிவு நோயுள்ளவர்களின் சிறுநீரில் வெல்லம் காணப்படுவதற்கான காரணத்தை சிறுநீரகத்தின் தொழிற்பாட்டுடன் தொடர்புபடுத்திக் கூறுக.
7. கழிப்பகங்களுக்கு அண்மையில் வீசும் விரும்பத்தகாத மணத்திற்குக் காரணமான வாயு எது?
8. அமினோ அமிலங்கள் உடைக்கப்படும் போது உருவாகும் $NH_3$ நச்சுத் தன்மையானது. எனவே அவை யூரியாவாக மாற்றப்படும்.
   அ) மேற்குறித்த செயற்பாடு எவ்வாறு அழைக்கப்படும்?
   ஆ) கழிவுப் பொருள் என்ற வகையில் நச்சுத் தன்மை குறைவாக இருத்தல் முக்கியமானது. இது தவிர்ந்த யூரியா கொண்டுள்ள வேறு இயல்புகள் 2 தருக.


B. பெண் இனப்பெருகத் தொகுதியின் அமைப்புத் தரப்பட்டுள்ளது.




1. A, B, C, D ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.
2. கருக்கட்டல் நிகழும் பகுதி எது?
3. சூல் கொள்ளல் என்றால் என்ன?
4. தாயினதும் முதிர் மூலவுருவினதும் குருதிகளுக்கிடையே பதார்த்தங்கள் பரிமாற்றப்படும் அமைப்பை குறிப்பிடுக.
5. சூலகமொன்றிலிருந்து சூல் விடுவிக்கப்பட்ட பின்னர் மீண்டும் அச் சூலகத்திலிருந்து சூல் விடுவிக்கப்பட எத்தனை நாட்கள் எடுக்கும்?



**த**ற்காலத்தில் தீக்குச்சிகளை பெட்டியல் உரசி தீயைப் பற்ற வைத்துக் கொள்கிறோம். இந்த உரசித் தீப்பற்றும் தீக்குச்சிகள் கண்டுபிடிக்கப்பட்டது 1827 ஆம் ஆண்டு. ஆங்கிலேய இரசாயன வியலாளர் ஜோன் வோக்கர் என்பவரின் கண்டுபிடிப்பு இது. தீக்குச்சியின் நுனியில் உள்ள பொஸ்பரஸின் மூக்கை




அரிக்கும் மணம் தாங்கமுடியாதிருந்தது. 1830 இல் பிரான்ஸ் நாட்டவரான சார்ள்ஸ் சோரியா என்பவர் தீக்குச்சியின் மருந்தில் வெள்ளைப் பொஸ்பரஸைச் சேர்த்தார். இதனால் தீக்குச்சியின் கெட்ட வாடை குறைந்தது. பெட்டிகளுக்குள் அடைக்கப்பட்ட தீக்குச்சிகள் வந்தன.

ஆனால், இதன் ஆதிவடிவம் தீப்பெட்டி அல்ல தீப்போத்தல்! பிரான்சில் முதன் முதலில் இந்தத் தீப்(பெட்டி) போத்தல் வந்தது 1781 இல். காற்றுப் புகாத கண்ணாடிக்குழாய் உருவில் இது இருந்தது.

பொஸ்பரசில் தோய்த்த காகிதச் சுருள் ஒன்று அந்தப் போத்தலுக்குள் இருக்கும். நெருப்பு தேவை என்றால் அந்தப போத்தலைப் போட்டு உடைக்க வேணடும. குபீரென்று நெருப்புக் கிளம்பும். அதில பற்ற வைத்துக்கொள்ள வேண்டியது தான்!

இந்த வகையில், பொஸ்பரஸ் புகை விஷத்தால் ஏராளமான சாவுகள் நிகழ்ந்தன. தற்கொலை செய்து கொள்கிறவர்களுக்கு அந்த பொஸ்பரஸ் குழாய் கிடைத்தது மிக வசதியாகப் போய்விட்டது. தப்பித் தவறி கீழே விழுந்தோ, மோதியோ உடைந்தாலும் ஆபத்து!

இப்போதும் அப்படிப்பட்ட தீப்பெட்டிதான் கிடைக்கும் என்று இருந்தால் ஒரு லாபம்; சிகரெட் பிடிக்கிறவர் கள் தாமாவே நிறுத்திக் கொள்வார்கள் என்று எதிர் பார்க்கலாம்.

# மக்களிடம் செல்லாமலே...

**ஒ**ரு ராஜா இருந்தான். அவன், தினமும் மந்திரியைக் கூப்பிட்டு, 'நாட்டில் மாதம் மும்மாரி பொழிகிறதா?' என்று கேட்பான்.

அதற்கு மந்திரி, 'ஆம் மகாராஜா...' என்பார். ஊரில் மழை இல்லாமல் ஏரி, குளங்கள், கிணறுகளெல்லாம் வறண்டு, மக்கள் ஒரு குடம் தண்ணீருக்காக தெருத் தெருவாய் ஓடுவதைச் சொல்லமாட்டார்.

'மக்கள் எல்லாரும் நலமாக இருக்கிறன்றனரா?' என்று கேட்பான் ராஜா. 'ஆம் மகாராஜா...' என்பார் மந்திரி. மக்கள் வறுமையால் வாடி, எங்கே இலவச கஞ்சி கிடைக்கும் என்று குவளையுடன் ஓடுவதைச் சொல்ல மாட்டார்.

ராஜாவும், மந்திரி சொல்வதைக் கேட்டு சந்தோஷப்படுவான்.



ராஜாவுக்கு வேறு வேலை இலலாததால், யாரையாவது கூப்பிடடு, கதை சொல்லச் சொல்லிக் கேட்டு, பொழுதைப் போக்குவான் ஆனால், ஒரு நிபந்தனை... கதையைத் தொடர்ந்து சொல்லிக்கொண்டே இருக்கவேண்டும். 'கதை அவ்வளவு தான் முடிந்து விட்டது...' என்று சொன்னால், அவரை சிறையில் தள்ளி விடுவான். கதையை போதும் என்று சொல்லும் அளவுக்கு சொன்னால், அவருகது பணமுடிப்பு அளிக்கப்படும்.

இப்படி ஒரு நிபந்தனை விதித்தான்.

கதை சொல்ல வந்தனர் பலர். ஆனால், போதும் என்ற அளவுக்கு தொடர்ந்து கதை சொல்ல முடியவில்லை. அவர்களையெல்லாம் சிறையிலடைத்தான் ராஜா. கடைசியாக கதை சொல்ல வந்தார் ஒருவர்.

"நிபந்தனை தெரியுமா?" என்று கேட்டான் ராஜா. " ஓ... தெரியுமே!" என்றார் அவர். "சரி... அப்படியானால் கதையைச் சொல்லும்..." என்றான் ராஜா அவரும் கதையை ஆரம்பித்தார்... "ஒரு பெரிய களஞ்சியம் நிறைய நெல் இருந்தது. அதில், ஒரு சின்ன வழி இருந்தது. ஒரு குருவி வந்து, ஒரு நெல்லைக் கொத்திக் கொண்டு போயிற்று. மற்றொரு குருவி வந்து, ஒரு நெல்லைக் கொத்திப் போயிற்று..." என்று சொல்லிக் கொண்டே இருந்தார்.

ராஜாவுக்கு கோபம் வந்தது... "சரி... சரி அப்புறம் என்ன?" என்று கேட்டான். "பொறுங்கள் மகாராஜா... களஞ்சியம் நெல் முழுவதும் தீர்ந்த பிறகுதான் மேற்கொண்டு கதை சொல்ல முடியும்... ஒரு குருவி வந்தது. ஒரு நெல்லை..." என்று இவர் ஆரம்பித்ததும், ராஜாவுக்கு தலை சுற்றியது...

"ஐயா... போதும், போதும்... கதையை நிறுத்துங்கள். பணமுடிப்பை வாங்கிக் கொண்டு போங்கள்..." என்றான். கதை சொன்னவர் பணமுடிப்பை வாங்கிக் கொள்ள ஒரு நிபந்தனை சொன்னார்... அதாவது, "பணமுடிப்பைக் கொடுங்கள் அதோடு ஏறகனவே கதை சொல்ல வந்தவர்களை சிறையில் அடைத்திருக்கிறீர் களே... அவர்களை விடுதலை செய்ய வேண்டும்..." என்றார்.

ராஜாவுக்கு புத்தி வந்து, சிறையில் இருந்தவர்களை விடுதலை செய்ததோடு, கதை சொன்னவருக்கும் பணமுடிப்பைக் கொடுத்தனுப்பினான். அன்று முதல் கதை கேட்பதை விட்டுவிட்டு மக்களை நேரில் சென்று சந்தித்து குறைநிறைகளை அறியநேரம் ஒதுக்கிக் கொண்டான் ராஜா. அதாவது, ராஜா என்றால் மக்களின் நல்வாழ்வுக்கு வழி செய்ய வேண்டும். அப்படியிருந்தால், மக்கள் நலமாக இருப்பர் மாதம் மும்மாரி பொழியும் என்பதே இக்கதை.



## வாழைப்பழ சிற்பம்!



**ந**மக்கு வாழைப் பழம் கிடைத்தால் என்ன செய்வோம்... "இதென்ன கேள்வி... பழத்தை சாப்பிட்டு, தோலை, குப்பையில் தூக்கி வீசுவோம்..." என்று தானே கூறுகிறீர்கள். ஆனால், ஜப்பானைச் சேர்ந்த, 23 வயது இளைஞர் ஒருவர், வாழைப்பழங்களில் விதவிதமான சிற்பங்களை உருவாக்கி, அசத்துகிறார். "வழக்கமான சிற்பங்களை உருவாக்குவதற்குப் பதிலாக, வித்தியாசமான சிற்பங்களை உருவாக்கலாமே... எனற எண்ணம் இவருக்குத் தோன்றியது. உடனடியாக களத்தில் இறங்கி விட்டார். வித்தியாசமான சிற்பங்கள் என நினைத்ததுமே, அவரின் கண் முன்தோன்றியது, வாழைப்பழம் தான்.

வி.ஐ.பி.,க்களின் முகங்கள், பிரபலமான கார்ட்டூன் உருவங்கள் என, விதவிதமான சிற்பங்களை, வாழைப்பழத்தைக் கொண்டு உருவாக்கி, சாதனை படைத்துள்ளார். வாழைப்பழத்தைத் தவிர, பற்பசையை மட்டுமே, சிற்பங்கள் உருவாக்குவதற்கு கூடுதலாக இவர் பயன்படுத்துகிறார். இந்த ஒவ்வொரு சிற்பத்தையும் உருவாக்குவதற்கு, அதிகபட்சமாக அரை மணிநேரம் தான் எடுத்துக் கொள்கிறார். பிரச்சினை என்னவெனறால், இந்த சிற்பஙகளை பாதுகாக்க முடியாததுதான். வாழைப பழங்கள் விரைவில் கெட்டுப்போய் விடுமே! ஆகவே இவரது சிற்பங்கள் அழியாச் சிற்பங்களல்ல. இவற்றின் ஆயுட காலம் ஐந்தோ பத்து நிமிடங்கள்தான். சிற்பங்களை உருவாக்கிய பின், அதனுடன் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்கிறார். அவ்வளவு தான். பிறகென்ன, அந்த வாழைப்பழச் சிற்பம் கெட்டுப் போவதற்கு முன், சாப்பிட்டு விடுகிறார்.

# நீ எந்தக் குரூப்?

**2009** மே மாதத்திற்கு முன்னர் விடுதலைப்புலிகளை விமர்சனம் செய்தவர்களுக்குப் புலிகளின் ஊடகங்கள் புதுப்புதுப்பெயர்களை சூட்டி தமக்குள் சந்தோஷப்பட்டார்கள். ஒட்டுக்குழுக்கள், துரோகிகள், எட்டப்பர்கள், காட்டிக் கொடுக்கும் கயவர்கள் என பட்டியலிட்டு கட்டுரை கட்டுரையாக வரைந்து தள்ளினார்கள். ஆனந்தசங்கரி முதல் கருணா வரை புலிகளின் ஊடகங்களில் யாரும் தப்பவில்லை. தமிழ்மக்களுக்கு இதனை தினம்தினம் ஊட்டிவிட அவைகள் தயங்கவில்லை. இது ஒருவகை மூளைச்சலவைதான்.

புலம்பெயர்நாடுகளில் அனைத்து தமிழ்தொலைக்காட்சிகளும், வானொலிகளும் (ஓரிரு வானொலிகள் விதிவிலக்கு) புலிகளுக்கெதிராக கருத்துச்சொல்பவர்களை தமிழ்மக்களிடமிருந்து அன்னியப்படுத்துவதில் போட்டிபோட்டுக்கொண்டு செயற்பட்டன. இலவசப் பத்திரிகைகளில் முதற்பக்கச் செய்திகளில் இவர்கள் வறுத்தெடுக்கப்பட்டனர். ஆனால் இந்த நிலைமைகள் மே மாதம் 2009 உடன் முடிவுக்கு வந்து விட்டன.

தற்போது புலிகளுக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகள், முரண்பாடுகள், மோதலகள் எல்லாம் மிகப்பெரிய மோசடிகளை தினம் தினம் வெளிக்கொணர்ந்த வண்ணமே உள்ளன. நெடியவன், விநாயகம் குழுக்களுக்குள் ஏற்பட்டுள்ள மோதல்கள் புலிகளின் சொத்து மோசடிகளை பகிரங்கப்படுத்துகின்றன. உலகிலேயே சிறந்த போராட்டக் கட்டமைப்புக் கொணடவர்கள் என கூறப்பட்ட புலிகள் அமைப்பு இப்படிப் பிளவுபட்டு தமக்குள் மோதுவார்கள் என்பதை புலிகளின் விசுவாசிகளோ அல்லது புலிகள் மேல் நம்பிக்கை கொண்டிருந்த தமிழ்மக்களோ நினைத்திருக்கமாட்டார்கள்.

ஏனெனில் பிரபாகரன் தனது தொலை நோக்குத் தீர்க்கதரிசனத்தால் புலிகள் அமைப்பை அப்படியானதொன்றாக வளர்த்திருக்கிறார் என்பதை புலிகளின் ஊடகங்கள் புளுகித்தள்ளி வந்திருந்தன. புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இருந்தவரை புலிகள் தப்பிப் பிழைத்து வந்ததை யாரும் மறுக்க முடியாது. பாலசிங்கம் டிசெம்பர் 14, 2006 ஆம் ஆண்டு இறந்து இரண்டே கால் வருடங்களில் புலிகள் அமைப்பு முள்ளிவாய்க்காலில் முடிவடைந்து போனது வரலாறாகிப்போனது.

பாலசிங்கம் இருந்திருந்தால் புலிகள் இன்னும் கொஞ்சக்காலம் நின்று பிடித்திருப்பார்கள் என்பதை ஓரளவு ஏற்றுக் கொள்ள முடிந்தாலும் புலிகளின் வீழ்ச்சியை யாராலும் தவிர்த்திருக்க முடியாததுதான்.

வெறுமனே இராணுவக்கட்டமைப்புக்குள் வளர்க்கப்படுகின்ற அமைப்புக்களின் முடிவுகள் பெரும்பாலும் புலிகளின் அழிவுகள் போல்தான் இருந்திருக்கின்றன. தமிழ்மக்களுக்கு புலிகள் அமைப்பானது சிங்கள அரசிற்கு மாற்றான வீரமிக்க ஒன்றாகக் கருதப்பட்ட போதிலும் புலிகளின் அரசியல் வெற்றிடம் அதன் இராணுவத்தோல்விக்கு வழிகோலியதுடன் அதன் தலைவரை கொன்றழிக்கின்ற பரி தாப நிலைக்கு தள்ளி யது.

இந்த அரசியல் வெற்றிடம்தான் இன்றைய புலிகளின் பிளவுகளுக்கு மிக முக்கிய காரணம்.



கடந்தகாலங்களில் மாற்றுக்கருத்துக் கொண்டவர்கள் மீது எத்தகைய மோசமான விமர்சனங்களை புலிகள் வைத்திருந்தார்களோ அதையே தமக்குள் வைத்து மோதல்களை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள்.

பிளவுபட்டவர்கள் திரும்பவும் இணையக்கூடிய அரசியல் அவர்களிடம் இல்லை. வெறுமனே இராணுவக்கட்டமைப்பின் ஈர்ப்பில் வளர்க்கப்பட்டவர்களிடம் இணக்கப்பாடொன்றை காணமுடியாது. வருமானத்திற்கும், சொத்திற்கும் ஆளையாள் போட்டுக்கொடுப்பவர்களாக இருக்கும்போது இவர்கள் தமிழ் மக்களின் எதிர்கால நலன்களிற்காக ஒன்றிணைவார்கள் என்பது ஒரு பகற் கனவாகத்தான் இருக்கமுடியும்.

தற்போது ஒரு புலிப்பிரமுகரைச் சந்தித்தால் எழும் முதற்கேள்வி நீர் எந்தக் குறூப் என்பதுதான். நெடியவனா, விநாயகமா, உருத்திரகுமாரா, கே.பியா என கேட்கவேண்டியிருக்கிறது. இலங்கை அரசின் ஒட்டுக்குழுக்கள் என கடந்த காலங்களில் மாற்றமைப்பினரைக் கேட்ட புலிகள் இன்று தமக்குள் அதே கேள்வியைக் கேட்டு மோதிக்கொண்டிருப்பது சுவாரசியமானதுதான்.

சில நாட்களுக்கு முன்னர் பாரிசில் இருந்து ஒலிபரப்பாகும் ரி.ஆர்.ரி வானொலியில் இதே கேள்வியை தமிழர் ஒருங்கிணைப்பு குழுவினர் தலைமைச் செயலகப் புலிகளை நோக்கி கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜனநாயக அரசியலுக்குப் புறம்பான வழிகளில் ஈடுபட்டு புலிகள் அமைப்பை முள்ளிவாய்க்கால்வரை கொண்டு போய்ச் சேர்த்ததில் புலம்பெயர்வாழ் புலிப்பிர முகர்களுக்கும் பங்குண்டு. தமிழ்த் தேசியத்தின் பேரால் சமூகத்தின் எல்லா மோசடிப் பேர்வழிகளெல்லாம் புலிகளின் பிரமுகர்களாக வலம்வந்து வருமானத்தை தக்கவைத்துக் கொணடனர். அவர்களுக்கு புலிகள் அமைப்பு இலங் கையில் அழிந்துபோனதையிட்டு கவலை கொண்டதெல்லாம் தமது வருமானத்திற்கு பங்கம் ஏற்பட்டு விட்டதே என்கிற கவலைதான். அவர்களுக்கு பாதிக்கபபட்ட மக்களைப் பற்றி எந்தவித கவலையுமில்லை. அவர்களுக்காக தமது பணத்தை செலவழிக்கத் தயாராக இல்லாதவர்கள்.

உழைப்பின்றி மக்களின் பணத்தில் வாழ்க்கையை கொண்டு நடாத்தியவர்களுக்கு திடீரென்று எல்லாமே நின்று போய்விட்டால் என்னவாகும். அதுதான் அவர்களுக்குள் நடைபெறும் இந்த குத்துவெட்டுக்கள்.

- இனியவன்

# காங்கிரஸ் கட்சிக்கு பா.ஜ.க சவால்



(லக்னோ)

மாஜாவதி மற்றும் அவரின் சகோதரர் மீது துணிவிருந்தால் அரசு ஊழல் விசாரணை நடத்துமா? என பா.ஜ.க வின் உமாபாரதி கேள்வி எழுப்பியுள்ளார். உத்திரப்பிரதேசத்தில், முதல்வர் மாயாவதியின் சகோதரர் ஊழல் பணத்தின் மூலம் போலியாக 26 நிறுவனங்களை நடத்தி வருவதாக பா.ஜ. குற்றஞ்சாட்டியுள்ளது.

உத்தரப்பிரதேச மாநில சட்டசபைக்கு அடுத்த ஆண்டு தேர்தல் நடக்கிறது. சமீபத்தில் காங்கிரஸில் இருந்து பா.ஜ.வில் இணைந்த உமா பாரதி உ.பி.யில் தேர்தலுக்கான பணிகளைச் செய்து அரசியல் நடத்தி வருகிறார். உ.பி.யில் முதல்வர் மாயாவதியின் ஊழல்களை மட்டுமே குற்றஞ்சாட்டி வந்த எதிர்கட்சிகளில், முதன்முறையாக மாயாவதியின் குடும்பத்தினரின் ஊழல்களையும் வெளிப்படுத்தி பரபரப்பினை ஏற்படுத்தியுள்ளது.


பொதுக்கூட்டம் ஒன்றில் உமா பாரதி பேசுகையில், முதல்வர் மாயாவதி மீது வருவாய்க்கு அதிகமாக சொத்துசேர்த்ததாக உச்ச நீதிமன்றில் வழக்கு உள்ளது. எனினும் எந்தவித முன்னேற்றமும் இல்லை. அரசு நிதியைத் துஷ்பிரயோகம் செய்து, முதல்வர் மாயாவதியும், அவரது சகோதரர் ஆனந்தகுமார் பெருமளவு சொத்து சேர்த்துள்ளனர்.

உ.பி. அரசியல் தீவிரம் காட்டும் காங. பொதுச்செயலர் ராகுல், சோனியா ஆகியோருக்கு துணிவிருந்தால், மாயாவதி, அவரது சகோதரர் ஆனந்தகுமார் ஆகியோர் மீது சி.பி.ஜ. விசாரணை நடத்த உத்தரவிடுவாரா? இந்த விஷயத்தில் காங. பதுங்குவது ஏன்? என்று உமாபாரதி கேள்வி எழுப்பியுள்ளார்.


# இன்று முடிவு அறிவிக்கப்படும்

(டில்லி)

சில்லறை வர்த்தகத்தில் அன்னிய நேரடி முதலீட்டுக்கு அனுமதியளிக்கும் முடிவை நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ், மார்க்சிஸ்ட் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் சீதாராம் யெச்சூரி ஆகியோரிடம் நேற்று முன்தினம் மத்திய நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தொலைபேசியில் தொடர்பு கொணடு, அரசு தனது முடிவை நிறுத்தி வைக்க உத்தேசித்துள்ள விவரத்தைத் தெரிவித்துள்ளார். இந்த முடிவை முறைப்படி நாடாளுமன்றத்தில் இன்று அறிவிக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.





# தமிழக ஐயப்ப பக்தர்கள் மீது கேரளாவில் தாக்குதல்

(சென்னை)



இந்தியாவின் கேரள மாநிலத்தில் அமைந்துள்ள முல்லைப் பெரியாறு அணைப் பிரச்சினையை கேரளாவில் உள்ள கட்சிகள் பூதாகரமான பிரச்சினையாக மாற்றி விட்டன. காவிரி நதிநீர்ப் பிரச்சினையில் கன்னட அமைப்புகள் தமிழர்களுக்கு எதிரான வன்முறையைத் தூண்டிய போது கூட முற்போக்கு மாநிலமான கேரளாவில் தமிழர்களுக்கு எதிரான பிரசாரங்கள் எதுவும் நடைபெறாது என்றே அனைவரும் நினைத்திருந்தனர்.

இந்நிலையில் காங்கிரஸ், பி.ஜே.பி போன்ற கட்சிகளைச் சார்ந்தவர்கள் முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் ஊடுறுவி கலவரத்தைத் தூண்டி வந்த நிலையில் இரு மாநில எல்லையிலும் கடும் பதட்டம் நிலவுகிறது.

பல இலட்சம் தமிழர்கள் ஐய்யப்பன் கோவிலுக்கு மாலை போட்டுள்ளனர். இதில் சில பக்தர்களின் மீதும், தமிழக லொறிகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் தமிழகத்தின் கம்பம், குமுளிப் பகுதியில் கேரளாவுக்குச் செல்லும் வாகனங்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

பக்தர்கள் தாக்கப்பட்ட செய்தியறிந்த தேனிப் பகுதி மக்கள் தேனி - கேரளா நெடுஞ்சாலையில் மறியலில் ஈடுபட்டனர். இதனால் கேரள, தமிழக எல்லையில் கடும் பதட்டம் உருவாகியுள்ளது.

# கனிமொழிக்கு நிரந்தர விடுதலை அல்ல

இந்தியாவில் நடந்த 2ஜி அலைக்கற்றை விவகாரத்தில் கனிமொழிக்கு வழங்கப்பட்ட பிணை நிரந்தரமல்ல என்று சுப்ரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

ஜனதாக் கட்சித் தலைவர் சுப்ரமணியம் சுவாமி நேற்று முன்தினம் தமிழ் நாட்டில் உள்ள மதுரைக்கு சென்றுள்ளார். அங்கு பத்திரிகையாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு தொவித்தாவது 2ஜி அலைவரிசை விசாரணை நல்ல முறையில் செயற்பட்டு வருகின்றது.



குற்றவாளியான கனிமொழிக்குக் கிடைத்துள்ள பிணை நிரந்தரமல்ல. அடுத்த விசாரணையின் போது கனிமொழியின் பிணையை ரத்துச் செய்யக்கோரி மத்திய புலனாய்வு நீதிமன்றத்தில் மனு செய்வேன்.

2ஜி அலைவரிசை வழக்கில் ஆ.ராசா மீது குற்றச்சாட்டு உள்ளது போல மத்திய மந்திரி ப.சிதம்பரம் மீதும் குற்றச்சாட்டு உள்ளதால் அவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சுப்ரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

# தியேட்டர், சாராயக்கடை காஷ்மீரில் வைக்கலாம்!

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில், ஒவ்வொரு வீட்டிலும் டி.வி இருக்கிறது. மக்கள திருட்டு வி.சி.டி.,யில் படம் பார்க்கின்றனர். இந்தச் சூழலில், சினிமாத் தியேட்டர்கள் செயறபட்டால் என்ன தவறு? இஸ்லாமிய நாடான பாகிஸ்தானில் கூட, தியேட்டர்கள் உள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

சாராயக் கடைகள், தியேட்டர்கள் இல்லாத காரணத்தால், காஷ்மீர் வரும் சுற்றுலாப் பயணிகள், இரவு வேளையில், அறைகளில் முடங்கிக் கிடக்க வேண்டியுள்ளது. காஷ்மீரில், சுற்றுலாவை மேம்படுத்த வேண்டுமெனில், சாராயக் கடை மற்றும் சினிமாத் தியேட்டர்களை, மீண்டும் திறக்க வேண்டும் என, எரிசக்தித் துறை மத்திய அமைச்சர் பரூக் அப்துல்லா கூறியுள்ளார்.

காஷ்மீர் மாநிலம், ஸ்ரீநகரில், தேசிய மாநாட்டு கட்சியின் நிறுவுனர் ஷெய்க் முகமது அப்துல்லாவின் பிறந்த நாள் விழா, முன்தினம் நடந்தது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தொவித்தார்.

# சோவியத் யூனியனை போல இந்தியாவும் உடையுமாம்



(சென்னை)

இந்திய மாநிலமான கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அவ்வாறு எடுக்காவிட்டால் சோவியத் யூனியன் உடைந் ததைப்போல இந்தியா உடையும் என்று மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலை வர் வை.கோ மத்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்திய மாநிலமான கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு அணை விவகாரமாக நேற்று முன்தினம் காலை பிரதமர் மன்மோகன் சிங்கை, வைகோ 20 நிமிடங்கள் சந்தித்துப் பேசியுள்ளார்.

இதற்குப் பின்பு செய்தியாளர்களிடம் பேட்டியளித்த வை.கோ, முல்லைப் பெரியாறு அணை விவகாரம் தொடர்பாக தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களுக்கு இடையிலான சுமூகமான உறவு பாதிக்கப்பட்டுள்ளது.

முலலைப் பெரியாறு அணையின் பாதுகாப்பை உறுதி செய்ய மத்திய காவல் படையை அங்கு அனுப்புமாறு பிரதமரிடம் கேட்டுக் கொண்டேன். இதைச் செய்யா விட்டால், முல்லைப் பெரியாறு அணை உடையும் நிலை ஏற்படும், அது எங்களது தென் தமிழகத்தில் மட்டுமல்லாமல் இந்தியா முழுமைக்கும் கடும் விளைவு களை ஏற்படுத்தும்.

இந்தியா, சோவியத் யூனியன் போல சிதறிப் போகும் வாய்ப்புகள் உண்டாகும் என்று பிரதமரிடம் எச்சரித்தேன்.

கேரள அரசு புதிய அணையைக் கட்டினால் நிச்சயம் எங்களுக்குத் தண்ணீர் வராது. எனவே கேரள அரசின் செயற்பாடுகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துங்கள். இதைச் செய்ய வேண்டியது மத்திய அரசின் கடமை மட்டுமின்றி சொல்ல வேண்டியது எங்களின் கட மையும் ஆகும்.

இதற்கு மேலும் மத்திய அரசு தனது கடமையிலிருந்து விலகுமானால் தமிழக மக்கள் இந்தப் பிரச்சினையை பார்த்துக் கொள்வார்கள் என்று பிரதமரிடம் கூறி விட்டு வந்துள்ளேன் என வை.கோ தெரிவித்துள்ளார்.

# தீ மிதிக்கும் முஸ்லிம்கள்




(விழுப்புரம்)

விழுப்புரம் அருகே இந்துக்களும், முஸ்லிம்களும் ஒன்றாக இணைந்து தீமிதித் திருவிழாவை ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றனர். விழுப்புரம் அருகே உள்ள மரகதபுரம் கிராமத்தில் ஆண்டுதோறும் மொகரம் (முஸ்லீம் மாதம்) மாதம் 8 ஆம் நாள் அங்குள்ள மசூதி முன்பு இந்துக்களும், முஸ்லிம் மக்களும் இணைந்து தீமிதி விழாவை சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தத் தீமிதிப்புத் திருவிழா கொண்டாடப்பட்டது.

அங்குள்ள ஆற்றங்கரையில் குளித்துவிட்டு வந்த முஸ்லிம் மற்றும் இந்து சமயத்தைச் சேர்ந்த ஆண்கள் தீக்குழியில் இறங்கி தீமிதித்தனர். பெண்கள் தீமிதிப்பதில்லை. இந்தத் தீமிதி விழாவுக்கான ஏற்பாடுகளை முஸ்லிம் சமுதாயத்தைச் சேர்ந்த 2 குடும்பங்கள் மட்டுமே செய்து வருகிறது. குழந்தை பிறக்காத பெண்கள் சுற்றுப்பகுதியைச் சேர்ந்த ஏராளமானோர் இதில் கலந்து கொள்கின்றனர். விநோதம் என்னவென்றால் பெண்களின் முந்தானையில் 3 முறை நெருப்பை அள்ளிப்போடுகின்றனர். அந்த நெருப்பை திரும்பவும் நெருப்புக் குழியில் கொட்டுகின்றனர். உடனே அவர்களுக்கு ஓரிரு மாதங்களில் கரு உருவாகிறது.

# ரஷ்யாவில் செல்வாக்கை இழந்தது ஆளும் கட்சி



(மொஸ்கோ)

ரஷ்யாவில் ஒருவரே தொடர்ந்து 2 முறை மட்டுமே அதிபராக இருக்கலாம் என அரசியல் சட்டம் நடைமுறையில் இருந்தது. பதவிக் காலத்தை 2 முறை வகித்து பல ஆண்டுகள் அதிபராக இருந்தவர் விளாடிமிர் புடின். 3வது முறை அதிபராக அரசியல் சட்டம் தடுத்ததால், தனது நெருங்கிய நண்பரான மெத்ததேவை கடந்த 2007 தேர்தல் வெற்றிக்குப் பிறகு அதிபர் ஆக்கினார் புடின். அவர் பிரதமர் ஆனார். கடந்த முறை 64.3 சதவீத ஓட்டுடன் 3ல் 2 பங்கு பெரும்பான்மை கிடைத்ததால் சட்டத்தை திருத்தினார். 2 முறைக்கு மேலும் அதிபராக இருக்கலாம் என்று ஆளும் யுனைட்டெட் ரஷ்யா கட்சி திருத்தம் கொண்டு வந்தது.

இந்த நிலையில், ரஷ்யாவில் தேர்தல் முடிவுகள் வெளியாகியுள்ளன. எண்ணப்பட்ட 96 சதவீத ஓட்டுகளில் ஆளும் கட்சிக்கு 49.5 சதவீதவாக்குகள் கிடைத்தன. வேறு 3 கட்சிகள் மீதமுள்ள 50.5 சதவீத வாக்குகளை, பிரித்துக் கொண்டன. 450 எம்.பி.க்களை கொண்ட நாடாளுமன்றத்தில் கடந்த முறை புடின் கட்சிக்கு 315 எம்.பி.க்கள் இருந்தனர். அது இப்போது 238 ஆக குறைந்துள்ளது.

பெரும்பான்மைக்குத் தேவையான 226க்கு மேல் கிடைத்தும் 3ல் 2 மடங்கு பெரும்பான்மை பெற முடியவில்லை. தேர்தல் முடிவால் அடுத்த ஆண்டுத் தொடக்கத்தில் நடைபெற உள்ள அதிபர் தேர்தலில் புடின் எளிதாக வெற்றி பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# எல்லை கடந்த ஆஞ்சநேயர் பாகிஸ்தானில் பிடிபட்டார்

உலகச் செய்திகள்



(இஸ்லாமாபாத்)

இந்திய-பாகிஸ்தான். எல்லையில் பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைய முயன்ற குரங்கு ஒன்றினை பாகிஸ்தான் பாதுகாப்புப்படையினர் பிடித்தனர். இந் திய-பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் உள்ளது. இப்பகுதியின் பஹவால்பூர் மாவட்டத்தின் சொலுஜிஸ்தான் எல்லையில் குரங்கு ஒன்று நேற்றுமுன்தினம் இந்திய எல்லையைத் தாண்டி பாகிஸ்தான் எல்லைக்குள் நுழைய முயன்றுள்ளது. இதனை பார்த்த அப்பகுதியினர் பாகிஸ்தான் பாதுகாப்புப்படையினரிடம் தெரிவித்தனர். உடனடியாக குரங்கைப் பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர். பிடிபட்ட குரங்கிற்கு பாதுகாப்புப்படையினர் 'பாபி' என பெயரிட்டுள்ளனர்.

பின்னர் பஹவால்கபூர் மிருகக் காட்சிசாலையில் வனத்துறையினர் அடைத்து வைத்துள்ளனர். மேலும் பாகிஸ்தானை உளவு பார்ப்பதற்காக குரங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது. இதேபோன்று கடந்த ஆண்டு மே மாதம் இந்தியாவிற்குள் நுழைய முயன்ற புறா ஒன்று பிடிபட்டது. இப்புறாவானது இந்தியாவின் பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் பகுதியிலிருந்து இந்திய எல்லைக்குள் வட்டமடித்துள்ளது. பாகிஸ்தானுக்காக உளவுபார்க்க அனுப்பி வைக்கப்பட்டதா என்ற சந்தேகம் இந்திய இராணுவத்திற்கு ஏற்பட்டது.இதைத் தொடர்ந்து தான் நேற்று முன்தினம் பாகிஸ்தான் எல்லைக்குள் குரங்கு புகுந்துள்ளது. இக்குரங்கு இந்தியாவிற்காக உளவு பார்க்க அனுப்பி வைக்கப்பட்டதா என பாகிஸ்தான் இராணுவத்திற்கு சந்தேகத்தினை ஏற்படுத்தியுள்ளது.

# புதிய திட்டத்தால் இங்கிலாந்தில் சர்ச்சை

இடுப்புக்கு மேல் ஆடை அணியாமல் ஊழியர்கள் பணியாற்றும் சிகையலங்கார நிலையமொன்றை இங்கிலாந்தில் [illegible]ப்பதற்கான திட்டம் சர்ச்சையை எதிர்கொண்டுள்ளது. நோர்விச் நகரில் இரவு களியாட்ட விடுதிகளை அதிகமாகக் கொண்ட பகுதியில் த கியுப் பார் என்ற பெயரில் இச் சிகையலங்கார நிலையம் ஆரம்பிக்கப்படுவதற்கு அனுமதி கோரி பெண் ணொருவர் விண்ணப்பித்துள்ளார்.

இந்த சிகையலங்கார நிலையம் பகல்நேரத்தில் டொப்லெஸ் ஊழியர்கள் பணியாற்றும் சிகையலங்கார நிலையமாக இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு பலர் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். இச்சிகையலங்கார நிலையத்தில் தொழில்புரிய விருப்பவர்கள் ஆண்களா, பெண்களா என்பது தெரிவிக்கப்படவில்லை.

இந்த நிலையத்தை திறப்பதற்காக நகர சபையின் அனுமதியைப் பெறும் [illegible]ரை தான் கருத்து வெளியிடப்போவதில்லை என இதன் உரிமையாளர் ரெபேக்கா பேர்ட் தெரிவித்துள்ளார்.

# ஆப்கானின் எதிர்காலம் குறித்த சர்வதேச மாநாடு பாகிஸ்தானும் கலந்து கொள்ளும் சூழ்நிலை

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியை, அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா தொலைபேசியில் தொடர்பு கொண்டு நேட்டோ தாக்குதலுக்கு வருத்தம் தெரிவித்தார். முதலில் மாநாட்டில் கலந்துகொள்ளாத பாகிஸ்தான் இதையடுத்து மாநாட்டின் அடுத்த நாட்களில் சில பிரதிநிதிகள் கலந்து கொள்ளக் கூடும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனை உறுதி செய்யும் வகையில் நேற்று முன்தினம் லாகூரில் பேட்டியளித்த பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி, நேட்டோ தாக்குதலுக்குப் பின் சீர் குலைந்த அமெரிக்கா, பாகிஸ்தான் உறவை மீண்டும் புதுப்பிக்க நீண்ட காலம் ஆகாது என நினைக்கிறேன் எனத் தெரிவித்துள்ளார். அமெரிக்காவும், பாகிஸ்தான் உடனான உறவை மீண்டும் புதுபபிக்க பல்வேறு முயற்சி எடுத்துவருகிறது. அதன் ஒரு பகுதியாக தற்போது பாகிஸ்தானும் தனது நிலையில் இருந்து சற்று இறங்கி வருகிறது என அறியப்படுகின்றது.

ஜேர்மனியின் பான் நகரில் ஆப்கா னிஸ்தானின் எதிர்காலம் குறித்த சர்வ தேச மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பித்தது. அமெரிக்கா, ஜேர்மனி உட்பட நூறு நாடுகளின் ஆயிரம் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். மாநாட்டைத் தொடங்கி வைத்துப் பேசிய ஜேர்மனிவெளிவிவகாரத்துறை அமைச்சர் குய்டோ வெஸ்டர்வேலே, சுதந்திர மான, பாதுகாப்பான, வளமான ஆப் கானை உருவாக்குவது தான் இம் மாநாட்டின் நோக்கம் எனக் கூறினார். சர்வதேச நாணய நிதியம (ஐ.எம்.எப்) மற்றும் அமெரிக்காவால் முடக்கி வைக்கப்பட்ட பல மில்லியன் அமெரிக்க டொலர பணத்தை விரைவில் ஆப்கானுக்கு அளிககத் திட்டமிட்டிருப்பதாக அமெ ரிக்க வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்டன் மாநாட்டில் அறிவித்தார். மேலும் அவர் ஆப்கானின் வளர்ச் சிக்கு அமெரிக்கா உதவும் எனவும் உறுதியளித்தார்.



ஜேர்மனியின் பான் நகரில் ஆப்கானிஸ்தானின் எதிர்காலம் குறித்த சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்ட சர்வ தேசப்பிரதிநிதிகள்....

# சீனாவிடம் திருப்பிக்கொடுத்தது அமெரிக்கா

(பீய்ஜிங்)

சீனாவிலிருந்து கடத்தப்பட்ட 22 டைனோசர் முட்டைப் படிவங்களை அமெரிக்கா திருப்பித் தந்தது. இந்த முட்டைப் படிவங்களின் வயது 6.5 கோடி ஆண்டுகளுக்கும் மேல் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஏலம் விடப்படுவதற்கு இவை கடத்தப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த முட்டைப் படிவங்கள், அமெரிக்காவின் சுங்கம் மற்றும் குடியேற்றத் துறை அதிகாரிகளால் 2007-ம் ஆண்டு கைப்பற்றப்பட்டது. இதில் இன்னும் 19 முட்டைகளில் உயிர்பெறக் கூடிய முதிர்வுறாக் கருவுறு உயிர் உள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2009ஆம் ஆண்டிலிருந்து இது போன்ற கடத்தப்பட்ட முட்டைகளை அமெரிக்கா திருப்பித் தருவது இது மூன்றாவது முறை என அமெரிக்காவுக்கான சீனத் தூதரக அதிகாரி கியுஷா.:.பாங் தெரிவித்துள்ளார்.

இந்த முட்டைகள் ஒவிராப்ட்டர் வகையைச் சேர்ந்தது என்றும், சீனாவின் தெற்குப் பகுதியிலுள்ள குவாங்டங் மாகாணத்தில் கிடைக்கப்பெற்றது எனவும் சீனாவின் புவியியல் அருங்காட்சியகம் தெரிவித்தது.

# உளவு பார்த்தார் ஆனால் அதைக் கொடுக்கவில்லை



"பிரிட்டிஷ் நாடாளுமன்றத்துக்குள் பணிபுரிந்தபடி ரஷ்யாவுக்காக உளவு பார்த்தார் என்ற குற்றச்சாட்டில் சிக்கிய 26 வயதான இளம்பெண் கேட்டியா ஸாடு லிவிடர், பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்படும் ஆபத்தில் இருந்து (தற்காலிகமாக) தப்பித்துக் கொண்டார். அவர் தொடர்ந்தும் பிரிட்டனில் தங்கியிருக்கலாம் என்று தீர்ப்பு வழங்கியிருக்கின்றது பிரிட்டிஷ் குடியேற்ற நீதிமன்றம்.

ரஷ்யாவில் இருந்து பிரிட்டனில் குடியேறிய கேட்டியா ஸாடுலிவிடர், பிரிட்டிஷ் எம்.பி. மைக் ஹான்காக்கின் உதவியாளராக பணியில் இணைந்து கொண்டிருந்தார். மைக் ஹான்காக் எம்.பி., பிரிட்டிஷ் பாதுகாப்பு தேர்வுக் கமிட்டியில் உறுப்பினராக உள்ளார். பாதுகாப்புத் தேர்வு கமிட்டியின் கூட்டங்களில் தேசிய பாதுகாப்பு தொடர் பான பல விஷயங்கள் ஆராயப்படுவது வழக்கம். அந்தக் கூட்டங்களில் எம்.பி.-யின் உதவியாளர் என்ற பெயரில் கேட்டியா கலந்துகொண்டது, பிரிட்டிஷ் உளவு அமைப்புகளை உசார் அடையச் செய்தது. அதையடுத்து அவரது நடவடிக்கைகளைக் கண்காணிக்கத் தொடங்கிய உளவுத்துறை, தமக்குக் கிடைத்த ஆதாரங்களின் அடிப் படையில், கேட்டியாவை ரஷ்ய உளவாளி என்று குற்றஞ் சாட்டியிருந்தது. அவரை பிரிட்டனில் இருந்து நாடு கடத்த வேண்டும் என்றும் அமைச்சுக்கு சிபாரிசு செய்தது.

பிரிட்டிஷ் பாதுகாப்பு ரகசியங்கள் எவற்றையும் நான் ரஷ்ய உளவுத் துறைக்குக் கொடுக்கவில்லை என்பதே கேட்டியாவின் வாதம் அது நீதிமன்றில் நேரடியாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஆனால், ரஷ்ய உளவுத் துறைக்கு ரகசியங்களைக் கடத்தினார் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை என்ற கோணத்தில், கேட்டியாவுக்கு சாதகமாக தீர்ப்புக் கிடைத்துள்ளது.

# “தமிழ் தேசியம் வீழ்ச்சியுறவில்லை”

## நிலாந்தன்

**கவிதை, ஓவியம், நாடகம், விமர் சனம், அரசியல் பத்தி, எழுத்து என பல தளங்க ளில் தீவிரமான செயற்பாடுடைய நிலாந்தன், வல்லினம் இணைய இதழுக்கு வழங்கியி ருந்த செவ்வியின் இரண்டாம் பகுதி**

**நேர்காணல் : பிரதீபா, யோ.கர்ணன்**

**கேள்வி :** யாழ் சமூகத்தின் சாதிய அதிகார கட்டுமானங்களில் தமிழீழ விடு தலைப் போராட்டத்தினால் ஏதே னும் மாற் றங்களை கொண்டுவர முடிந் தது என்ற நம்பிக்கையை வைத்தி ருக்கக் கூடியதாக உள்ளதா இன்றைய சூழல்?

**நிலாந்தன் :** சுமார் முப்பத்தெட்டு ஆண்டு கால ஆயுதப் போராட்ட மானது ஆயிரம் ஆண்டுகால சாதி யின் வேர்களை எப்படி அதிரடியாக அறுக்க முடியும்? ஆனால் சாதிமைய சிந்தனைகளில் அது திரும்பிச் செல்ல வியலாத அதிர்வுகளை ஏற்படுத்தியி ருக்கிறது.

**கேள்வி :** உங்களது பிள்ளையார் ஓவியங்களைப் பார்த்திருக்கிறேன். உங்களது ஓவியங்களது கருப்பொரு ளாக பிள்ளையார் வந்தது எப்படி அமைந்தது? அவரை வரைதலிலும் போரின் தாக்கம் இருக்கிறதா? அல்லது யுத்தப்பின்னணி மனநிலை யிலிருந்து விடுபட விரும்பும் மனதின குறியீடாக இருந்தாரா பிள்ளையார்?

**நிலாந்தன் :** எனது பிள்ளையார் ஓவி யங்கள் அனைத்தும் போர் ஓவி யங்களே.

**கேள்வி :** உங்களது ஓவிய முயற்சி கள் தற்பயிற்சியில் வந்தவை என்று கூறியிருக்கிறீர்கள். ஓவியத்தின் மீதான ஈர்ப்பிற்கு மாற்கு மாஸ்டர் போன்றவர்களின் காலம் காரணமாய அமைந்ததா?

**நிலாந்தன் :** என்னுடைய தாத்தா நன்றாக படம் வரைவார். அவரிடம் இருந்து பெற்றதே இது. பாடசாலை யில் அ.ராசையாவிடம் தனியே சில ஆண்டுகள் ஓவியம் பயின்றேன். அப்பொழுது எனது வகுப்பில் நான் ஒருவன்தான் ஓவியத்தை ஒரு பாடமாக எடுத்திருந்தேன். பின்னாளில் யேசுராசாவினூடாக மாற்கு விட்ம் நெருக்கம் எற்பட்டது. நான் அவரது மாணவன் அல்ல. ஆனால் என்னை செதுக்கியவர் களில் அவரும் ஒருவர்.

**கேள்வி :** உங்களது ஓவியங்கள் இப் போது கைவசம் இருக்கின்றனவா?

**நிலாந்தன் :** அனேகமாக இல்லை. இருபத்திமூன்று தடவைகளிற்குமேல் இடம்பெயர்ந்துள்ளேன். இந்த இடப் பெயர்வுகளின் போது எனது படைப் புக் கள் எதனையுமே நான் எடுத்து வர வில்லை.

**கேள்வி :** உங்களை பாதித்த,பாதிக் கிற ஓவியர்களைப் பற்றி?

**நிலாந்தன் :** நிறங்கள் வடிவங்களி னூடாக நிறங்கடந்த, வடிவங்கடந்த அனு பவங்களை பகிரும் எல்லா ஓவியர்களையும் எனக்குப் பிடிக்கும்.

**கேள்வி :** முகாமிலிருந்து வெளியே வந்ததும் உங்களைப் போன்றவர் கள் எழுதிய கருத்துக்கள் தமிழ் தேசிய மன நிலையால் எடுத்துக் கொள் ளப்பட்ட விதத்தை எவ்வாறு எதிர்கொண்டீர்கள்? குறிப்பாக யுத்தத் தின் சாட்சிகள் எவ்வித பரிசீலனையு மின்றி துரோகிகள் ஆக்கப் பட்டமை. மற்றது துரதிர்ஷ்டவசவமாக அத்த கையதொரு மனநிலையே நீங்கள் நம் பிய தேசியவாத கலாசாரத்தின் கூறு என்கிற போது?

**நிலாந்தன் :** முதலாவதாக ஒன்றைச் சொல்ல வேண்டும். விமர்சனங்கள் வரட் டும். அவை அறிவு பூர்வமான வையோ இல்லையோ ஆக்கபூர்வ மானவையோ இல்லையோ முதலில் அபிப்பிராயங்கள் வரட்டும். ஏனெனில் மாறுபட்ட அபிப் பிராயங்களும் அவற றின் மீதான விமர் சனங்களுமே அரசிய லின் அடித்தளத்தை அறிவுபூர்வமான தாக மாற்றும். மாறுபாடுகளே பன் மைத்துவத்தின் அடித்தளம். பன்மைத் துவமே ஜனநாயகத்தின் அடித்தளம். எனவே ஈழத்தமிழர்கள் மத்தியில் உண் மையான அக ஜனநாயகத்தை உருவாக்க விமர்சனங்கள் வரட்டும்.

*இரண்டாவது* - நீங்கள் குறிப்பிடும் தமிழ்த்தேசிய மனோநிலை பற்றியது. உண்மையில் அது ஒரு தேசிய மனோ நிலையல்ல. அது ஒரு கறுப்பு வெள்ளை மனோநிலை. ஒரு சராசரி தமிழ் மனம் தனது பக்தி இரத்தத்திலிருந்து பெற்ற கறுப்பு வெள்ளை சிந்தனா முறை யது. பக்தி இரத்தமானது எதையுமே தேவர்-அசுரர், கதாநாயகன்-வில்லன், தியாகி-துரோகி என்று வகிடு பிரித் துப் பார்க்கவே முயலும். அது எதை யுமே இந்த அளவுகோல்களிற்கு தோதாக தட்டையாக்கியே பார்க்கும். இந்த கறுப்பு வெள்ளை சிந்தனை முறையைத்தான் பலரும் தேசிய உணர வாக மாறாட்டம் செய்கிறார்கள். இல்லை. இது ஒரு தேசிய மனோநிலையே அல்ல. நாங்கள் என்றைக்குமே இதை நம்பியதும் இல்லை. எங்களுடைய இந்த நிலைப்பாடு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உயர்மட்டத்திற்கு நன்கு தெரியும். வன்னியிலிருந்த எதையும் புத்திபூர்வமாக அணுகும் எவருக்கும் இது தெரியும்.

ஆயின் உண்மையான தேசிய மனோ நிலையென்றால் என்ன? இதை இன் னும் ஆழமாகப் பார்க்க வேண்டும்.

**கேள்வி :** தேசியம் என்றால் என்ன?

**நிலாந்தன் :** நான் விக்கிபீடியாவின் வரைவிலக்கணங்களின் உள்ளேயோ அல்லது அரசறிவியல் கோட்பாடுகளின் உள்ளேயோ அதிகம் நுழைய விரும்ப வில்லை. பதிலாக தேசியத்தை அதன் பிரயோக வடிவத்திலேயே வியாக்கி யானம் செய்யவும் வரைவிலக்கணம் செய்யவும் விளைகிறேன். அதாவது தூய தேசியத்தை பற்றியல்ல. மாறாக பிரயோக தேசியத்தைப் பற்றியே நான கதைக்க முற்படுகிறேன்.

தேசியம் எனப்படுவது அதன் பிர யோக வடிவத்தில் ஒரு மக்கள் திர ளின் கூட்டுப்பிரக்ஞை ஆகும்.

அது இனப்பிரக்ஞையாகவோ,மொழிப் பிரக்ஞையாகவோ, மதப்பிரக்ஞையா கவோ அல்லது பிராந்திய பிரக்ஞையா கவோ அல்லது வேறெந்த பிரக்ஞையா கவோ கூட இருக்கலாம். முக்கியமாக அது வேர் நிலையில் முற்போக்கான தாகவே இருக்க வேண்டும் என்றில்லை. ஆனால் அந்தப் பிரக்ஞையை நெறிப் படுத்தி தலைமை தாங்கும் அரசியல் இயக கம் அல்லது கட்சி அதை முற் போக்கானதாக பண்பு மாற்றம் செய்ய வேண்டும்.


உதாரணமாக, தனது வேரில் இனவெறி யாக அல்லது மதவெறியாக அல்லது பிராந்திய வெறியாக அல்லது மொழி, வெறியாக உருவாகும் ஒரு அடிநிலை தேசிய உணர்வை அதாவது கீழிருந்து மேலெழும் அந்த கூட்டுப் பிரக்ஞையை மேலிருந்து கீழிறக்கப்படும் ஜனநாய கத்தின் மூலம் ஒளிபாய்ச்சி புதிய ஊட்டச்சத்தை இறக்கி அதில் இருக் கக்கூடிய வேர்நிலை நோய்க்கூறான அம்சங்களை மெல்லமெல்ல இருள் நீக்கம் செய்ய வேண்டும்.

அதாவது மேற்கத்தைய ஆய்வாளர் கள் கூறுவது போல ‘தேசியத்தின் உள ளடக்கம் ஜனநாயகமாக இருக்க வேண் டும்.’

அத்தகைய ஒரு தேசியம்தான் எப் பொழுதும் சர்வதேசியமாக விரியும் தன்மையுடையதாகக்காணப்படும். இல்லை யெனில் அது தனக்குள் உட்சுருங்கும் குறுந்தேசியமாக இறுகிக் கட்டி பத்தி விடும்.

இதெல்லாம், குறித்த தேசிய பிரக் ஞைக்கு தலைமை தாங்கும் அமைப் பின் மனவிரிவில்தான் தங்கியுள்ளது. வெளி விரியும் தேசியம்தான் எப் பொழுதும் சமயோசிதமான வெளி யுறவுக் கொள்கைகளைக் கொண்டி ருக்கும். மாறாக உட்சுருங்கும் தேசிய மானது, கையாளப்பட வேண் டிய தரப்புக்களை எல்லாம் பகை நிலைக்குத்தள்ளி ஒரு கட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டு அழிக்கப் பட்டு விடும். இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்து நீங்கள் கேட்ட கேள்விக்குரிய விடையைக கண்டுபிடிக்கலாம்.

**கேள்வி :** இறுதிப்போரின் தோல்வி - விடுதலைப்புலிகளின் வீழ்ச்சி புலத்திலும் பலரை பாதித்தது. புலிகள் மீது விமர்சனங்களைக் கொண்டிருந்தவர்கள் உட்பட. இவை இந்தப் போராட்டத்தில் தமது வாழ்வின் ஏதோ ஒரு பகு தியை, இளமையை, நண்பர்களை, உறவுகளை இழந்தவர்களது தாக்க மாக இருந்தது. கிட்டத்தட்ட உங்கள் வாழ்வின் பெரும்பகுதியையே போருக குள் செலவழித்த உங்களது தலை முறை இந்தத் தோல்வியை- உங்கள் கண்முன் நிகழ்ந்த மனித அழிவை அதன் தாக்கத்தை எப்படி எடுத்துக் கொண்டீர்கள்? அதிலிருந்து மீளல் இந்தச் சமூகத்தில் சாத்தியப்படுகிறதா?



**நிலாந்தன் :** மரணத்துள் மெய்யா கவே வாழ்ந்த எவருக்கும், மரணத் தின் ருசி மிகத்தெரிந்த எவருக்கும் மரணம் ஒரு முடிவல்ல எனத்தெரியும்.

வரலாற்று பிரக்ஞை அல்லது வர லாற்று உணர்வு எனப்படுவது மரணதை ஒரு முடிந்த முடிவாக ஏற்றுக்கொள்ள மறுப்பதிலிருந்தே முகிழ்ந்தெழுகிறது. மரணத்தை ஒரு முடிவாக ஏற்றுக் கொண்டால் வரலாறு எனப்படுவது வெறு மனே நாயகர்கள் அல்லது தலைநகரங் களின் பெயர்ப்பட்டியலாக சுருங்கிப் போய்விடும்.

எனவே வரலாற்று பிரக்ஞை உடைய எந்த ஈழத்தமிழரும் நந்திக்கடலை ஒரு முடிவாக அல்லது நந்திக்கட லோடு ஈழத் தமிழர்களின் வரலாறு உறைந்து போய் விட்டதாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பதிலாக அதை அவர்கள் ஒரு யுக மாற்றமாகவே பார்ப்பார்கள்.

நந்திக்கடலின் பின் ஈழத்தமிழ் அர சிய லில் நான்கு முக்கிய மாற்றங் கள் நிகழ்ந்துள்ளன. முதலாவது, இந்தியாவிற்கும் ஈழத்தமிழ் அரசிய லிற்குமிடையிலிருந்த சட்டப்பூட்டு திறக்கப்பட்டு விட்டது.

இரண்டாவது அமெரிக்கா தலைமை யிலான மேற்கு நாடுகள் ஈழத்தமிழர் களை நோக்கி அதிகம் நெருங்கிவரு கின்றன.

மூன்றாவது, பிராந்திய இழுவிசைக ளிற்கிடையில் சிக்கியே ஈழப்போராட் டம் சின்னாபின்னமாகியது. இப்பொ ழுது ஈழப்போராட்டம் இல்லாத வெ றிடத்தில் இரு பிராந்திய பேரரசுகளிற குமிடை யிலான இழுவிசைக்குள் கொழும்பு சிக்கியிருக்கிறது.

நாலாவது, ஈழத்தமிழர்களின் அரசிய லானது ஒரு புதிய பன்மைத்துவத்தை நோக்கி அதாவது அக ஜனநாயகத்தை நோக்கி செல்ல தேவையான கதவு கள் போதியளவு திறக்கப்பட்டு விட் டன.


எனவே தமிழர்கள் உள்ளேயும் வெளி யேயும் தங்களுடைய புதிய பலங் களை ஒருங்கு திரட்ட வேண்டிய ஒரு கால கட்டம் இது. இத்தருணத் தில் ஒரு பழைய யுகத்தின் புதை மேட்டில் குந்தி யிருந்து இறந்த காலத்தை மம்மியாக்கம் (mummfy) செய்வதைக் கைவிட்டு, வரலாற்று பிரக்ஞை மிக்க எல்லா ஈழத்தமிழர் களும் இறந்த காலத்திலிருந்து பெற்ற படிப்பினைகளின் அடிப்படை யில் ஒரு புதிய யுகத்தின் புதியபாடு பொருளை தேடத்தொடங்கவேண்டும்.

---

## இணைப்பாட்டம்!



இந்தியக் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸகீர்கானுடன் கை கோர்த்திருக்கிறார் பொலிவுட் நடிகை சுஷ்மா ரெட்டி. நடிப்பதற் காகவோ, கிரிக்கெட் விளையாடுவதற் காகவோ அல்ல, தொழில் தொடங்கு வதற்காக.... இருவரும் இணைந்து உயர்ரக ஆடைகளை விற்பனை செய் யும் தொழிலை மும்பையில் தொடங்கியிருக் கின்றனர். “வார ணம் ஆயிரம், “வெடி” படங்க ளில் நடித்துள்ள சமீரா ரெட்டியின் சொந்தச் சகோ தரிதான் இந்த சுஷ்மா ரெட்டி.



# சிறந்த உள்ளூர் உற்பத்திகள் பொருளாதாரத்தை வலுவாக்கும்



(கொழும்பு)

சிறந்த உற்பத்திகள் மூலமே தனிநபர் சமூகம் மற்றும் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்த முடியுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

விஜயராம வீதி கொழும்பில் அமைந்துள்ள நிர்மாணப் பயிற்சியளிப்பு அபிவிருத்திக்கான நிறுவனத்தின் சவ்சிறிபாய கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய அருங்கலைகள் பேரவையின் கைவினைப் போதனாசிரியர்கள் மற்றும் பயிற்சியாசிரியர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தேசிய அருங்கலைகள் பேரவையின் கீழ் அந்தந்த மாவட்டங்களில் கைவினைப் பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்ற போதிலும் அவற்றினூடாக சிறந்த பயிற்சிகளைப் பயனாளிகள் பெற்றுக்கொள்வது மட்டுமல்லாமல் சிறந்த உற்பத்திகளையும் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறான சிறந்த உற்பத்திகள் மூலமே உள்ளூர் வெளியூர் சந்தை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும் தனிநபர் வருமானத்தை மட்டுமல்லாது சமூகத்தினதும் தேசியத்தினதும் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் முடியும். பல நிலையங்களில் காணப்படும் குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டு சிறந்த பயிற்சிகளுக்கூடாகவும் உற்பத்திக் கூடாகவுமே நல்ல பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் இதற்கு சகலரது ஒத்துழைப்பும் ஒத்தாசையும் முக்கியமானது என்றும் சுட்டிக்காட்டினார்.

தேசிய அருங்கலைகள் பேரவையின் தலைவர் புத்திகீர்த்தி சேன தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான நிறுவனங்களில் ஒன்றான தேசிய அருங்கலைகள் பேரவையின் கீழ் இயங்கிவரும் 131 கைவினைப் பயிற்சி நிறுவனங்களினது செயற்பாடுகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதன் போது சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தும் நிறுவனங்கள் தொடர்பிலும் சிறந்த முறையில் இயங்க முடியாமல் இருக்கின்ற நிறுவனங்களினது சாதக பாதக நிலைப்பாடுகள் தொடர்பிலும் துறைசார்ந்தோரிடம் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது முக்கியமாக சிறந்த பெறுபேறுகளை எட்ட முடியாத நிறுவனங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்ட அதேவேளை குறித்த நிலையங்களுக்கு தாம் நேரடியாக விஜயம் மேற்கொண்டு அது விடயம் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் உறுதிமொழி வழங்கினார்.

இன்றைய இக்கலந்துரையாடலில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, ஆலோசகர் திருமதி ஜெகராசசிங்கம், தேசிய அருங்கலைகள் பேரவைப் பணிப்பாளர் பூலோகசிங்கம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

முன்னர் லக்சல நிறுவனத்தின் கீழ் இயங்கி வந்த 131 பயிற்சி நிறுவனங்கள் அமைச்சரவை தீர்மானத்தினால் தேசிய அருங்கலைகள் பேரவையின் கீழ் கொண்டு வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஜே.ஆரைப் போன்றே...

இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்த இரகசிய தகவல் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்ரமசிங்க நீண்ட காலமாக அமெரிக்காவுடன் உறவுகளைப் பேணி வருவதாகவும், அது அவர்களது குடும்ப வழக்கம் எனவும் இத்தகவல் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

1970 மற்றும் 1980களில் இலங்கையை ஆட்சி செய்த ஜே.ஆர்.ஜயவர்தன அமெரிக்காவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணி வந்தார். செல்வந்த வர்த்தகக் குடும்பத்தில் பிறந்த ரணில் விக்ரமசிங்க சோசலிசக் கொள்கைகளில் நம்பிக் கையற்றவர்

அமெரிக்க அரசியல் மற்றும் வரலாறு பற்றி ரணில் விக்ரமசிங்கவுக்கு தெளிவாகத் தெரிகின்றது. அமெரிக்க குடியியல் யுத்தம், அமெரிக்க படைத்தரப்பு வரலாறு மற்றும் அரசாங்க நிர்வாகம் போன்ற விடயங்கள் தொடர்பில் அவர் அறிந்து வைத்துள்ளார்.

விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த அமெரிக்காவின் ஒத்துழைப்பு தேவை என்ற நிலைப்பாட்டை ரணில் விக்ரமசிங்க கொண்டிருந்தார். அமெரிக்காவின் ஆதரவினைப் பெற்றுக் கொள்வதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூடுதல் முனைப்பு காட்டி வருகின்றார் என இந்த இரகசிய தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் குறிப்பிட்டுள்ளது

## அரசியல் கைதியாக...

வலிகாமம் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக அகதி வாழ்க்கை வாழ்ந்து வரும் மயிலிட்டி பிரதேச மக்களை அவர் சந்தித்து உரையாடிய வேளையில் தனது மன உணர்வினை வெளிப்படுத்தியுள்ளார்.

இடம்பெயர்ந்த நிலையில் வடமராட்சியின் கரையோர கிராமங்களில் வாழ்ந்து வரும் மயிலிட்டி பிரதேச மக்களை கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் சந்தித்து உரையாடினார். அவருடன் வடக்கு தமிழ் மக்களுக்கென உதவப்போவதாக முன் வந்திருக்கும் புலம்பெயர் தமிழர்கள் நால்வரும் பிரசன்னமாகியிருந்தனர்.

முன்னதாக கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் யாழ்.மாவட்ட மீனவ அமைப்புப் பிரதிநிதிகளை தன்னுடன் இணைத்து 'நெய்டோ' எனும் உதவி அமைப்பொன்றை உருவாக்கியிருந்தார். அவரது அரசியல் பின்னணியினை அறிந்து கொண்ட பலரும் பின்னர் அதிலிருந்து விலகிக் கொண்ட நிலையில் தற்போது மீண்டும் யாழ் திரும்பியிருக்கிறார்.

நான் இன்று வரை அரசியல் கைதியாகவே உள்ளேன். என்னால் சுதந்திரமாக எதுவும் கதைக்க முடியாது. யுத்தத்தின் வடுக்களை நாம் மறந்து விட்டு நடக்கப்போவது பற்றி கதைப்பதே பொருத்தமானது. எனது உதவிகளை கூடுதலாக வன்னி மக்களுக்கே வழங்கப் போகின்றேன் என கே.பி. மேலும் தெரிவித்தார்

## வடக்கு...

முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தினர் மக்களை துன்புறுத்துவதாக எவ்வித முறைப்பாடுகளும் கிடையாது மக்கள் சுதந்திரமாக வாழ்ந்து வருகின்றனர், அவர்களது அன்றாட நடவடிக்கைகளுக்கு இராணுவத்தினர் எந்த வகையிலும் இடையூறுகளை ஏற்படுத்தவில்லை.

வடக்கில் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் இராணுவத்தினர் பிரசன்னமாவதாக குற்றம் சுமத்தப்படுகின்ற போதிலும், வவுனியாவில் இடம்பெற்ற இரண்டு நிகழ்வுகளுக்கு தாம் சமுகமளித்ததாகவும் இராணுவத்தினர் அந்த நிகழ்வுகளில் பிரசன்னமாகியிருக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புதுப்பொலிவு...

முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்நிலையில் துரையப்பா விளையாட்டரங்கை நவீன முறையில் புதுப்பொலிவுடன் புனரமைப்பதற்கு யாழ்.வர்த்தக சங்கம் நிதியுதவி வழங்கவுள்ளதாகவும் அதன் பராமரிப்பை யாழ்.மாநகர சபை முன்னெடுக்கவுள்ளதாகவும் மாநகர முதல்வர் தெரிவித்தார்.

இதுதொடர்பிலான ஒப்பந்தமொன்று கடந்த மூன்றாம் திகதி கொழும்பிலுள்ள அமைச்சரின் வாசஸ்தலத்தில் இடம்பெற்றது.

இதன் போது யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் தயானந்தா உள்ளிட்ட துறைசார்ந்த பலரும் கலந்து கொண்டனர்.

# டெங்கு கட்டுப்பாடு புங்குடுதீவில் துரிதம்

(வேலணை)

புங்குடுதீவில் டெங்கு நுளம்பினைக் கட்டுப்படுத்தும் வகையில் வேலணைப் சுகாதார வைத்திய அதிகாரி துரித நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

வேலணை பிரதேச சபையினரின் அனுசரணையுடன் புங்குடுதீவு கிராமம் முழுவதற்கும் புகையூட்டும் நிகழ்வின கடந்த செவ்வாய்க்கிழமை முதல் ஆரம்பித்துள்ளனர்.

பிரதேசபையின் தவிசாளர் சி.சிவராசாவினது நேரடிக் கவனத்தில் இந்த டெங்கு நுளம்பு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# கிராமிய போக்குவரத்துச் சேவை சிறிய ரக பஸ்கள் இறக்குமதி

கிராமிய போக்குவரத்தை மேம்படுத்த 2000 ஒற்றைக் கதவுடைய பஸ் வண்டிகளை அடுத்த வருடம் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் பஸ் வண்டிகள் அடுத்த ஆண்டில் இருந்து கிராமிய போக்குவரத்து சேவையில் இணைத்துக் கொள்ளப்படும்.

இவ் பஸ் இறக்குமதி தொடர்பாக போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கமவினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளை அடுத்து நிதியமைச்சு அனுமதியை வழங்கியுள்ளதாக போக்குவரத்துச் சபையின் தலைவர் ஏ.டி.பந்துசேன தெரிவித்துள்ளார்.

## போர் முடிவடைந்த...

மேற்கூறப்பட்ட தரவுகள் யுனிசெவ் அமைப்பினால் சேகரிக்கப்பட்டு, வடபகுதி குடும்ப மீள் இணைவாக்க அலகிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு ஜுலை மாதம் வெளியிட்ட தரவுகளில் 676 சிறார்கள் காண்மாமல் போனதாகக் தெரிவிக்கப்பட்டிருந்தது. பெரும்பாலான சிறார்கள் 16 முதல் 18 வயதுக்கு உட்பட்டவர் களாவர்.

அதேவேளை காணாமல் போன சிறார்களின் மொத்த எண்ணிக்கையில் 30 சதவீதமான சிறார்கள் போர் முடிவுற்ற பின்னர் அரசாங்கத் தின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இறுதியாகக் காணப்பட்டதாகவும், 60 சதவீதமான சிறார்கள் விடுதலைப் புலிகளின் கட்டாய ஆட்சேர்ப்புடன் தொடர்புபட்ட நிலையிலும் பதிவாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

## ஐ.நா.வில் ஜனாதிபதி...

வெளிவிவகார அமைச்சின் விருப்பத்தின் பேரில், இந்த அறிக்கையை தாமே தயாரித்ததாக பெல் பொட்டிங்கர் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

போர்க்குற்றங்கள் தொடர்பாக தனிநபர்களை பொறுப்புக் கூறுவதற்கு இந்த ஆணைக் குழுவுக்கு அதிகாரம் வழங்கப்ப டவில்லை என்று அனைத்துலக மன்னிப்புச் சபை உள்ளிட்ட மனித உரிமை அமைப்புகள் கடுமையாக விமர்சித்திருந்தன.

ஜனாதிபதி செயலகத்தில் நாங்கள் ஒரு குழுவை வைத்து பணியாற்றினோம். நாங்களே கடந்த ஆண்டு ஐ.நா.வில் ஜனாதிபதி நிகழ்த்திய உரையை எழுதிக் கொடுத்தோம். அதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது என்று பெல் பொட்டிங்கர் நிறுவனத்தின் தலைவர் டேவிட் வில்சன் கூறியுள்ளார்.

அத்துடன் 2010 ஆம் ஆண்டில் ஜனாதிபதி லண்டன் வருவதற்கு முன்னர் தமது நிறுவனம் பிரித்தானிய தமிழர் பேரவை மற்றும் நவ சமசமாசக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோரை சந்தித்ததாகவும், அவர் கூறியுள்ளார்.

ஆனால் தாம் இலங்கை அரசுடனான தொடர்புகளில் சட்டவிரோதமாக எதையும் செய்யுமாறு ஆலோசனை கூறவில்லை என்றும் டேவிட் வில்சன் தெரிவித்துள்ளார்.



# குடாநாட்டிற்கு குடிநீர் விநியோகம் 21 ஆயிரம் மில்லியன் ஒதுக்கீடு



(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இரணைமடுக் குளத்திலிருந்து யாழ். குடாநாட்டிற்கு குடிநீரை வழங்குவதற்காக 21 ஆயிரம் மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

சுத்தமான குடிநீரை பெற்றுக் கொடுக்கும் வகையிலேயே இச்செயற்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாட்டின் ஏனைய இடங்களுடன் ஒப்பிடுகையில் வடக்கிற்கான நீர்வடிகாலமைப்பு முறைமை சீரானது ஆகையால் அப்பகுதிக்கான நீர்விநியோகத்தினை இலகுவாக முன்னெடுக்க முடியும். சுமார் மூன்று அல்லது நான்கு வருடங்களுக்குள் இத்திட்டத்தை பூரணமாக்குவதன் மூலம் குடாநாட்டு மக்களுக்கு குழாய் மூலமான சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொடுக்க முடியுமென நம்புகிறோம்.

இதன் முதற்கட்ட செலவினங்களுக்காக 2012 ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தில் 21 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதென அமைச்சர் தெரிவித்தார்.

# முல்லை தண்ணிமுறிப்பில் 65 குடும்பங்கள் மீள்குடியமர்வு

(வவுனியா)

மெனிக்பாம் நலன்புரி நிலையத்தில் இருந்த முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு கிராமத்தை சேர்ந்த 65 குடும்பங்கள் நேற்று முன்தினம் உதவி அரசாங்க அதிபர் தலைமையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் ஐக்கியநாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டதாக மீள்குடியேற்ற பிரதி அமைச்சின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் எஸ். மகேஸ்வரன் தெரிவித்தார்.

மீள்குடியேறும் நிகழ்வின் போது முல்லைத்தீவு மாவட்ட மீள்குடியேற்ற பிரதி அமைச்சின் இணைப்பாளர் எஸ்.மகேஸ்வரன் மற்றும் உதவி திட்டப்பணிப்பாளர் கேணல் தயாநந்தா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

காதல் திருமணம் செய்து நான்கு நாட்களேயான இளம் குடும்பஸ்தர் தூக்கிலிடப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது. மல்லாகம் பகுதியைச் சேர்ந்த சிவராசா நவநீதன் (வயது 31) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் கொழும்பு சென்று திரும்பிய நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெல்லிப்பளை பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர். (எப்.எஸ்)

# பேச்சின் மூலம் இணக்கம் ஏற்பட தெரிவுக்குழுவில் பங்கேருங்கள்

## கூட்டமைப்பைக் கோருகிறார் சம்பிக்க

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நம்பி மோசம் போகக்கூடாது என அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வீண் பிடிவாதம் பிடித்து புலிகளின் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ள நினைத்தால் அழிவுகளையே சந்திக்க நேரிடும் என்றும் பேச்சுவார்த்தைகளின் ஊடாக இணக்கம் காணப்பட வேண்டுமாயின் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பங்கேற்று இனப் பிரச்சினைக்கான தீர்வுகளை எட்ட முயற்சிக்க வேண்டும் எனவும் ரணவக்க தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பூர்வீகம், அங்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் என்று பேசித்திரிந்தால் தமிழ் மக்களுக்கு என்றும் விடிவு ஏற்படப் போவதில்லை.

அரசாங்கம் வெளிப்படைத் தன்மையுடனும் பொறுப்புணர்வுடனும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகின்றது.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வைராக்கியத்துடனும் பிரிவினைவாத சிந்தனைகளுடனும் செயற்படுகின்றனர். வெறும் 4 வீதமான வாக்குகளை மட்டுமே வைத்துக் கொண்டு 96 வீதமான பெரும்பான்மைக்கு சவால் விடுவது வேடிக்கையான விடயமாக உள்ளது.



புலிகள் ஆயுதமுனையில் போராடியே தோல்வி கண்டனர். இந்த நிலையில் மீண்டும் தனி நாடு தர வேண்டும். வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பூர்வீகம் என்று பேசுவது மீண்டும் அழிவுக்கே வழிவகுக்கும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டிலுள்ள பொறியியலாளரை மீளவும் இலங்கைக்கு வர அழைப்பு



(கொழும்பு)

நாட்டில் நிலவும் சாதகமான சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு வெளிநாடுகளில் வசிக்கும் சகல இலங்கை பொறியியலாளர்களையும் நாட்டுக்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய பொறியியலாளர் ஆலோசனைப் பணியகத்தின் தலைவர் நிஹால் ரூபசிங்க தெரிவித்தார்.

வெளிநாடுகளில் எமது பொறியியலாளர்கள் வழங்கும் சேவையினால் நாட்டுக்கு 500 மில்லியன் ரூபா நிதி அந்நிய செலாவணியாகக் கிடைப்பதுடன் அடுத்த வருடத்தில் இதனை இரட்டிப்பாக்கி ஆயிரம் மில்லியனை அந்நிய செலாவணியாகப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

நீர்ப்பாசன நீர்முகாமைத்துவ அமைச்சின் செய்தியாளர் மாநாடொன்று நேற்றுத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் கலந்துகொண்டு விளக்கமளித்த போதே நிஹால் ரூபசிங்க இவ்வாறு தெரிவித்தார். கடந்த காலங்களில் நாட்டில் நிலவிய மோசமான சூழ்நிலை காரணமாக பொறியியலாளர்கள் பலர் நாட்டை விட்டு சர்வதேச நாடுகளுக்குச் சென்று விட்டனர்.

இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பொறியியலாளர்கள் 15,000 பேர் சேவையில் உள்ளதுடன் இதில் ஐந்து வீதமானோர் இவ்வாறு வெளிநாடுகளில் உள்ளனர். அடுத்த வருடத்தில் நாட்டில் பிரதான மான 14 பாரிய நீர்ப்பாசன மற்றும் மின் உற்பத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

வெலிஓயா நீர்ப்பாசனத் திட்டம் 6000 மில்லியன் ரூபா செலவிலும், யானு ஓயா திட்டம் 16 மில்லியன் ரூபா செலவிலும், நிதிமாலியந்த நீர்ப்பாசனத் திட்டம் 1100 மில்லியன் ரூபா செலவிலும் முன்னெடுக்கப்படவுள்ளன. இத்தகைய அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெறுகின்ற போது பொறியியலாளர்களின் மேலதிக தேவை கருதியே வெளிநாடுகளிலுள்ள பொறியியலாளர்களை நாட்டுக்கு அழைக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# குடும்பஸ்தர் காயம்

(யாழ்ப்பாணம்)

இருசக்கர உழவு இயந்திரத்தில் இடது கை சிக்கிக் கொண்டதனால் காயமடைந்த நிலையில் இளம் குடும்பஸ்தர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு காயமடைந்தவர் ஊர்காவற்துறை பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் (வயது - 29) என்பவராவார். நேற்றைய தினம் உழவு இயந்திரத்தை இயக்க முற்பட்ட வேளை கை தவறி இயந்திரத் தினுள் சிக்கிக் கொண்டதால் அவர் கையில் படுகாயமடைந்தார். (எப்.எஸ்)

# சிறுவர் துஷ்பிரயோக வழக்கு விரைவில் விசாரணைக்கு

(கொழும்பு)

சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பிலான வழக்குகளை விரைவில் விசாரணைக்குட்படுத்தும் திட்டத்தை மேலும் சில மாவட்டங்களுக்கு விஸ்தரிக்க சட்ட மாஅதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

தற்போது பொலன்நறுவை, அனுராதபுரம் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டம் வெற்றியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன் பிரகாரம் எதிர்காலத்தில் யாழ்ப்பாணம், புத்தளம் பதுளை ஆகிய மாவட்டங்களில் இந்தத் திட்டம் செயற்படவுள்ளது.

இதன்கீழ் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெற்று 24 மணித்தியாலங்களில் அது தொடர்பாக தகவல்கள் பொலிஸ் நிலையம் மற்றும் சட்ட மாஅதிபர் திணைக்களத்திடம் வழங்கப்பட வேண்டும்.

அவற்றுடன் தொடர்புடைய முறைப்பாடுகளை முன்வைப்பதற்கு 4 வாராகால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த வழக்குகளை விரைவில் விசாரணைக்கு உட்படுத்துவதற்கு நீதிபதிகள் இணக்கம் தெரிவிள்ளதாகவும் சட்ட மா அதிபர் திணைக்ளம் குறிப்பிட்டுள்ளது.

# இராணுவத் தளபதி இந்தியா பயணம்



(கொழும்பு)

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜயசூரிய, புதுடில்லியில் இந்தியாவின் பாதுகாப்பு இணை அமைச்சர் பல்லம் ராஜு உள்ளிட்ட பாதுகாப்புத்துறை அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் வி.கே.சிங்கின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் புதுடில்லியைச் சென்றடைந்த இராணுவத் தளபதிக்கு செங்கோட்டையிலும், சவுத் புளொக்கில் அமைந்துள்ள இந்திய இராணுவத் தலைமையகத்திலும் இராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

போரில் மரணமான இந்திய இராணுவத்தினர் நினைவாக அமைக்கப்பட்டுள்ள அமர்ஜவான் ஜோதியில் அவர் மலர்வளையம் வைத்து வணக்கம் செலுத்தியுள்ளார்.

சவுத் புளொக்கில் இந்திய இராணுவத் தலைமையகத்தில் லெப்.ஜெனரல் ஜெகத் ஜயசூரியவை, இந்திய இராணுவத்தின் பயிற்சிப்பிரிவுப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ராகேஸ் பாசி வரவேற்றார்.

அதன்பின்னர், விருந்தினர் ஏட்டில் கையெழுத்திட்ட இராணுவத் தளபதிக்கு அங்கு செங்கம்பள வரவேற்பும், இராணுவ மரியாதைகளும் அளிக்கப்பட்டன.

இதன் பின்னர், புதுடில்லியில் இராணுவத் தளபதி, இந்தியாவின் பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் பல்லம் ராஜுவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அத்துடன் இந்திய விமானப் படைத் தளபதி எயர் சீவ் மார்சல் என்.ஏ.கே.பிறவுணையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

# ஊடகவியலாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள ஊடகவியலாளர்களை ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) இன்று சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்கால அரசியற் சூழ்நிலைகள், யாழ். மாவட்ட அபிவிருத்திப் பணிகள், எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏனைய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்படவுள்ளது.

இன்று மாலை 3.00 மணியளவில் 273, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளதாகவும், எனவே ஊடகவியலாளர்களை கலந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 டிசம்பர் 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.